Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

மகாகவி பாரதியாரின்

மூன்று கனவுகள்

சுதந்திரம்

சமத்துவம்

சகோதரத்துவம்

வானவில் பிரசுரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय हरिद्वार

वर्ग संख्या..... आगत संख्या.....

पुस्तक-विवरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित ३०वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए अन्यथा ५० पैसे प्रति दिन के हिसाब से विलम्ब दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மும்மணிகள்

102871

தொகுத்துத் தந்தவர் :
சி. விசுவநாத ஐயர்

பதிப்பாசிரியர்கள் :
டி. வி. எஸ். மணி
சீனி. விசுவநாதன்

With Best Compliments From:
NALLI CHINNASAMY CHETTY
SILK GOODS MERCHANTS
T. NAGAR, CHENNAI-600017

வானவில் பிரசுரம்
18, இரண்டாவது குறுக்குத் தெரு + மேற்கு மாம்பலம்
சென்னை - 600033.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு : நவம்பர்—1979
மறு அச்சு ஜனவரி—1982

வெளியீடு எண் : 8

© வானவில் பிரசுரம், சென்னை-600 035

விலை ரூ. 3-20

Name of the Book	:	MAHAKAVI BHARATI'S 'MUM MANIGAL'
Name of the Editors	:	T. V. S. Mani & Seeni. Viswanathan
Name of the Publisher	:	VAANAVIL PRASURAM West C. I. T. Nagar, Madras-600 035.
Name of the Printer	:	Sree Agastya Printers, Madras-600 017.
No. of Pages	:	64
Price per Copy	:	Rs. 3.20
Classification	:	Essays

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

தீபம் நா. பார்த்தசாரதி
தினமணி கதிர் ஆசிரியர்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் – ஆகிய இந்த வார்த்தைகளும், தொடர்களும் வேறெந்தக் காலத்தையும்விட இந்தக் காலத்துக்கும் பொருத்த மாகவும், உரியவையாகவும் இருக்கின்றன. இவற்றைத் தலைப்பாகக் கொண்டு பேசாத, எழுதாத அரசியல் இயக்கங்களோ, தலைவர்களோ, பிரமுகர்களோ இன்று இல்லை.

மகாகவி பாரதியார் அன்றே இவைபற்றி 'இந்தியா' வில் எழுதியுள்ள கட்டுரைகள் இன்றும் வீரியம் குன்றுத வேகத்துடன் விளங்குகின்றன. 'மந்திரம்போல் வேண்டு மடா சொல்லின்பம்'—என்று கூறிய மகாகவியின் அந்தப் பேரின்பம் இந்தக் கட்டுரைகளிலேயே நமக்குக் கிடைத்து விடுகிறது.

மகாகவியின் சிறப்புக்களில் ஒன்று அவருடைய எழுத்தில் அவர் மனம் எந்த அளவு ஈடுபட்டிருக்கிறது என்பதாகும். மனம் ஆழமாக ஈடுபடாமல் எழுதும் எந்தவொரு எழுத்திலும் இந்த அளவு காலங் கடந்து நிற்கும் வீச்சும் வீரியமும் இராது.

ஜனபிமானம், உத்தம ஸ்வரூபம், சமத்துவஞானம், மகா பரிசுத்தம், திவ்விய உணர்ச்சி, சுதந்திர லட்சுமி— போன்ற அற்புதமான வார்த்தைப் பிரயோகங்களைக் கண்டு பாரதியாரின் நடை வீச்சை வியக்கிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிப் பிரசுரிக்கப் பட்டவையேனும் என்றும் புதுமையாய் விளங்கும் இக் கட்டுரைகள் பாரத மக்களுக்குப் பயன்படுபவை; வழி காட்டுபவை; ஒளி தருபவை.

மகாகவியின் நூற்றாண்டு நெருங்குகிற இந்தச் சமயத்தில் இப்படி ஒவ்வொரு நூலாக வெளிவருவது தமிழ் மக்கள் செய்த பாக்கியமாகும்.

அந்த நாளில் மகாகவியின் எழுத்துக்களைத் தேடிக் கண்டுபிடித்து, நூல் வடிவில் வழங்கிய மகாகவி பாரதி யாரின் இளைய சகோதரர் ஸ்ரீவிசுவநாத ஐயர் அவர்கள், இந்த நூலில் இடம் பெற்றுள்ள இக் கட்டுரைகளை யெல்லாம் 'இந்தியா' பத்திரிகையிலிருந்து சேகரித்துக் கொடுத்த பெருமைக் குரியவராகின்றார். அவர் செய்த சேவைக்குத் தமிழ் மக்கள் என்றும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மகாகவி பாரதியாரின் நூல்களைத் தொடர்ந்து அழகாகவும் திருத்தமாகவும் பதிப்பித்து வரும் நண்பர் களான திரு. டி. வி. எஸ். மணி அவர்களுக்கும், திரு. சீனி. விசுவநாதன் அவர்களுக்கும், இந்த நூலை இப்போது வெளியிடும் வானவில் பிரசுரத்தாருக்கும் என் அன்பையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

பாரதி யுகத்தைப் படைக்கும் இலக்கியப் பணியில் இப்படிப்பட்ட நூல்கள் முதன்மை பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழா நெருங்கி வரும் இத்தருணத்தில் பல பதிப்பாளர்களும் பாரதி நூற்களை அச்சிட்டுப் பரப்பும் பணியில் இப்படியே முன்வந்து முனைந்து தொண்டாற்ற வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்கள் உரை

மகாகவியின் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கொள்கைகளையும் கொண்ட புதிய நூல் இது.

'இந்தியா' பத்திரிகையின் தாரக வாசகங்களான சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்-என்ற மூன்று மணிமந்திரங்களின் தெள்ளத் தெளிவான விளக்கங்களை இப் புதிய நூலில் காணலாம்.

இந்த நூல் சிறப்பாக அரசியல் அம்சம் கொண்டது. ஆனல், அந்தக் காலத்தில், நம் பாரத மக்கள் எளிதில் ஏற்றுக்கொள்வதற்காக, நம் நாட்டு வரலாறு, தர்மம், பண்பாடு—இவற்றில் மேற்கண்ட மூன்று தத்துவங்களும் ஏற்கெனவேயே எந்த அளவுக்குக் கையாளப்பட்டு வந்தன என்பதற்கு மிகவும் விரிவான விளக்கம் மகாகவி பாரதியாரால் கொடுக்கப்பட்டுள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த வரலாற்றில் மிக முக்கியமான பிரெஞ்சுப் புரட்சியில் (The French Revolution) புரட்சிக்காரர்களின் தாரக மந்திரமும், குறிக்கோளும் 'Liberty-Equality -Fraternity' என்பதேயாகும் என்பதை நாமறிவோம். அதைப் போலவே, நமது பாரதநாட்டு மக்களும் சுதந்திர விடுதலைப் போரில் ஏற்கவேண்டிய குறிக்கோள்களும் கொள்கைகளும் இவையே என்பதை வற்புறுத்திக் காட்டுவதன் பொருட்டாகவே மகாகவி பாரதியார் அவற்றின் உண்மைக் கருத்துக்களை விளக்கி எழுதினர்.

மகாகவியின் எழுத்தோவியங்களை யெலாம் முயன்று சேகரித்து நூல் வடிவாக்கி, அந்நூலிற்கான தகுந்த மகுடமிட்டும் தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள மகாகவியின் இளைய சகோதரர் திரு. சி. விசுவநாத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐயர் அவர்களே, இக் கட்டுரைகளைப் பிரசுரம் செய்ய எங்களுக்கு வழங்கி, நூலிற்கு "மும்மணிகள்" என்ற மகுடத்தையும் சூட்டினர். இந்நூல் பிரசுரமாகத் துணை செய்தவர் மதுரை நடராஜன் செட்டியார் அவர்கள்.

தினமணி கதிர் ஆசிரியர் தீபம் நா. பார்த்தசாரதி அவர்கள் எங்கள் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி, அருமையான அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

எல்லார்க்கும் எங்கள் உள்ளார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மகாகவியின் நூற்றாண்டு விழா நெருங்கி வருகின்ற இப் பொன்னான தருணத்தில், இன்னமும் நூல்வடிவம் பெறுத பல கருத்தோவியங்கள் கிடைக்கப்பெற்று, அவையும் நூல் வடிவம் பெறும் பெறற்கரும் பெரும் பேற்றை எமக்கு அருளுமாறு அன்னை பராசக்தியைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம். ஓம். வந்தேமாதரம்.

டி. வி. எஸ். மணி
சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

சுதந்திரம்	...	9
சமத்துவம்	...	20
சகோதரத்துவம்	...	34
சத்திய விரதம்	...	52

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எமது இனிய வெளியீடுகள்

பாரதியார் கவிதைகள்.....

மகாகவி பாரதியாரின்
சக்கரவர்த்தினி-கட்டுரைகள்

மகாகவி பாரதியாரின்
இலக்கியச் சோலை

பத்மாவதி சரித்திரம்
அ. மாதவய்யா

திக்கற்ற இரு குழந்தைகள்
பண்டித எஸ். எம். நடேச சாஸ்திரிகள்

பிரதாப முதலியார் சரித்திரம்

சுகுண சுந்தரி
மாயூரம் வேதநாயகம் பிள்ளை
எழுதிய இரு நூல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதந்திரம்

1. ஓர் விளக்கம்

சுதந்திரம் என்றால் தன்னிச்சை என்பது பொருள். மற்றெதையும் சகாயமாகக் கொண்டு அதன்மேல் சார்ந்து பிறர்இஷ்டத்தின்படி நடவாமல் சுயேச்சையாய் இருக்கும் ஓர் பரமோத்தமமான நிலைமை. சுதந்திரம் என்பது மெத்தவும் பரிசுத்தமான விஷயம். கடவுளின் கருணையால் இது ஜீவ கோடிகளுக்குப் பிரசாதிக்கப்பட்டு இருக்கிறது. இதை ஒவ்வொரு மனிதனும் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜாதியும் சுதந்திரமாய் வாழ வேண்டியது இயற்கையே.

இதற்கு ஒரு பெரிய உதாரணம் சிருஷ்டியிலேயே பார்க்கலாம். மிருகங்கள், பக்ஷிகள் முதலான ஜந்துக்கள் காட்டில் யதேச்சையாய் வசித்தால் எவ்வளவு சுகமாய் வளர்கின்றன. எவ்வளவு பலமுள்ளவைகளாய் இருக்கின்றன. அவைகளை நாட்டில் கொணர்ந்து வைத்து மனிதன் எவ்வளவுதான் போஷாக்கு செய்தாலும் காட்டில் உள்ளவைகள் போல் அவ்வளவு நேர்த்தியாய் இவைகள் வளருவதில்லை. காட்டில் மல்லிகைக்

[இந்தியா : 10-10-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடிகள் யதேச்சையாய் வளர்ந்து எவ்வளவு அழகாயும் வாசனையாயும் மனோரம்மியமாயும் இருக்கின்றன! இதே மல்லிகைச் செடிகளை நாட்டிற்குள் கொணர்ந்து தொட்டிகளில் வைத்து நல்ல எருவிட்டு, தண்ணீர் கொட்டி வெகு ஜாக்கிரதையாய் வளர்த்தாலும் இந்தக் காட்டுச் செடிகள் அவ்வளவு மனோரம்மியமாய் இருப்பதில்லை. ஸ்ரீகண்வ மஹாமுனிவரின் ஆசிரமத்தில் முதல் முதல் துஷ்யந்த மஹாராஜன் சகுந்தலையை உற்று நோக்கியபோது இந்த இயற்கையையே மனதில் எண்ணினான். இதே மாதிரிதான் கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் கிளிக்கும் யதேச்சையாய் சஞ்சரிக்கும் கிளிக்கும் வித்தியாசம். இதற்கெல்லாம் காரணம் என்ன? நாம் வீட்டில் கொணர்ந்து வைத்து வளர்த்து வரும் செடியும், கூண்டிலடைக்கப்பட்ட கிளியும் தமது சுதந்திரங்களை இழந்து விட்டுப் பர தந்திரமடைந்து விட்டன. தனது ஜீவனத்திற்குக்கூட அயலாருடைய கையை எதிர்பார்க்கும்படி பலாத்காரம் செய்யப்படுகின்றன. அவைகள் தங்களிஷ்டப்படி நடக்கச் சக்தியற்றவைகளாய் இருக்கின்றன. ஆனபடியால்தான் சுயேச்சையாய் இருந்து நன்கு வளர்ந்து வருபவைகள் போல் வளருவதில்லை. யதேச்சையாய் வளருபவை களுக்கு ஒரு நிர்ப்பந்தமும் இல்லையாகையால் நன்றாய் வளர்ந்து வருகின்றன.

ஒருவன் சுதந்திரமுடையவனாய் இருந்தால் அவன் பலவானாய் இருப்பான். தன்னிஷ்டப்படி நன்மைகளை விருத்தி செய்து கொள்வான். தைரியவானாய் இருப் பான். அதே மாதிரியான ஒருஜாதி சுதந்திரமுடையதாய் இருந்தால் அந்த ஜாதி வசிக்கும் தேசம்தான் சுவர்க்கம். அந்த தேசம் தான் மோக்ஷ உலகம். அந்த தேசத்தில் தான் ஜனங்கள் சந்தோஷமான மனத்தோடு வாழ்வார் கள். ஜனங்கள் சூரர்களாயும், வீரர்களாயும், தீரர் களாயும், பலிஷ்டர்களாயும், தார்மிகர்களாயும் இருப் பார்கள். நிம்மதியான மனச் சமாதானத்துடன் வாழ்வார்கள். எவ்வித மனக் கவலையுமின்றிக் கடவுளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிச்சலமாய்த் தொழுதேத்தலாம். நாட்டினர்க்கு எண்ணிறந்த நன்மை புரியலாம்.

சுதந்திரமில்லாத நாடுதான் சர்வ நாசமான படு பாழ் பாலை நிலம். அவ்விடத்தில் ஜனங்கள் சதா துக்கி களாய் இருப்பார்கள். சந்தோஷமென்பதே அவர் களுக்குத் தெரியாது. ஏழைகளாகி உணவுக்கும் வருந்தி, பல விசித்திரமான வியாதிகளால் பீடிக்கப்பட்டு அகால மரணத்திற்கு அனுவசியகமாயும் ஜனங்கள் அனுயாச மாயும் ஆளாய் விடுகிறார்கள். நாட்டின் ஜனங்களுடைய அருமையையும், பெருமையையும் தெரியாத அன்னியன் அரசாட்சி செய்து கொண்டு அந்நாட்டினரைக் காட்டு மிருகங்களைப் போல் கொடுமையாக நடத்தி வருவான். பல துஷ்ட சட்டங்கள் செய்யப்படும். பல அநியாய வரிகள் ஜனங்கள் தாங்க முடியாத அவ்வளவு பளுவாய் விதிக்கப்படும். யாராவது சுதந்திரத்தைப் பற்றிப் பேசினால், அவர்கள் கதி அதோகதி தான். அத்தகைய பக்திமான்களை அவர்களின் சுதந்திர விரோதிகள் பல கொடிய கஷ்டங்களுக்கு உட்படுத்தி, கண் காணாத நாட்டில் கொண்டு போய் வைத்து இம்சை செய்கின் றனர். சுதந்திரமில்லாத ஜாதிக்குத் தன் தேசத்திலேயே சரியான மதிப்பில்லை யென்றால் அயல் நாடுகளில் கேட் பானேன்? சுதந்திரமில்லாதவர்கள் மஹான்களாய் இருந்த போதிலும் ஆடுமாடுகளைக் காட்டிலும் கேவல மாய் நடத்தப்பட்டு வருகின்றார்கள்.

பல வித நஷ்டங்களுக்குட்படுத்தப்படுகின்றனர். காரணம் என்ன? சுதந்திரமில்லாமையேதான். ஒரு ஜாதியின் அருமை தெரியாத அன்னியனுடைய நிரங்கு சப் பிரபுத்துவத்தால் அவனிச்சைப்படி அடக்கி யாளப் படலே யாம்.

இத்தகைய கஷ்டங்களையெல்லாம் ஒழித்து விட்டு ஒரு ஜாதி சுதந்திரமடைய ஐக்கியம், கட்டுப்பாடு, சங்கேதம், சுய ஜனபிமானம் ஆகிய இவைகள் ரொம் பவும் அவசியமானவைகளே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பாரத உணர்ச்சி

நமது பாரத நாட்டிலே இப்பொழுது இரண்டு மூன்று வருஷ காலமாய் சுதந்திரக் கிளர்ச்சி வெகு மும்முரமாய் பரவி வருகிறது. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் அக்ரம இம்சைகளே சகிக்க முடியாமல் போய்விட்டன. உலகத்திலோ எங்கு பார்த்தாலும் பல ஜாதிகள் கிளர்ச்சி கொண்டு எழுந்து கொடுங்கோன்மையைத் தைரியமாய் எதிர்த்து சுதந்திரமடைந்து வருகின்றன. ஜப்பான் முதலிய தேசங்கள் இத்தகைய சுதந்திரமடைந்து, பிறகு ஐரோப்பாவிலுள்ள துருக்கியும் சுல்தானின் கொடுங் கோலரசைத் தள்ளி ஜனங்கத்தை ஸ்தாபித்து விட்டது. நெடுங்காலமாய்க் கொடுங்கோலரசாக ஆளப்பட்டு வந்த பாரசீகமும் சுதந்திரத்தை யடைந்து ஜனங்க இஷ்டப்படி அரசினை ஏற்படுத்திக் கொண்டு விட்டது. நமது பாரத தேசத்தில் இத்தகைய சுதந்திரதாகம் தற்சமயம் வெகு அதிகமாய் உண்டாகி வருகிறது. பாரத நாட்டின் ஜனங்கள் 1857 ஆம் வருஷம் இந்துஸ்தான சுதந்திர யுத்தம் தொடங்கினர். பெரிய யுத்தம் நடந்தது. சரியான படி நடத்தாதபடியால் நம்மவர்கள் எண்ணம் முற்றிலும் சேடறவில்லை. பல தலைவர்கள் சித்திரவதை செய்யப் பட்டனர். பல மகான்கள் பீரங்கி வாயில் வைத்துச் சுடப்பட்டனர். பல வீரர்கள் தூக்கிலிடப்பட்டனர். பலர் கங்கையில் தள்ளப்பட்டனர், பல வாலிப வீரர்கள் வெட்டப்பட்டனர். பலர் ஏமாற்றப்பட்டுக் கொல்லப் பட்டனர். பலர் தனியாகத் துரத்திக் கொல்லப்பட் டனர். அநேக இங்கிலீஷ்காரர்களும் கொல்லப்பட் டனர். பாரத ஜனங்களின் முன்னோர்களான இந்துக் களும், மகமதியர்களும் இந்துஸ்தான் சுதந்திரமடைய

[இந்தியா . 30-10-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டுமென்ற மேலான நோக்கத்துடன் பகதூர் ஷாவைப் பாதுஷாவாக டில்லியில் சிம்மாசனமேற்றிய ஸ்ரீ நானாராவ் டொண்ட பண்ட் சேனாதிபத்தியத்தின் கீழ் இருந்து எதிர்த்தனர். கடைசியில் அம்முயற்சி தவறி விட்டது. எண்ணிறந்த பேர்கள் பலவித கொடுமை களுக்கு ஆளாயினர் என்பது எல்லாருமறிந்ததே. சரித் திரங்களாலும் தெரியவரும். அந்த வேகத்தில்தான் ஏட்டுச் சுரைக்காயான காலஞ்சென்ற "மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியவர்களின் பிரஜா சுதந்திர மகா சாஸனம்" பாரத வாசிகளுக்குக் கொடுக் கப்பட்டது. தேசத்தில் குழப்பம் நீங்கி சமாதானம் உண்டாய் விட்ட போது இது பயனற்ற வெறுங் கடுதாசி யாய் விட்டது. அதன் ஒரு வார்த்தையாவது நிஜமா யில்லை. நிறைவேற்றப்படவுமில்லை. எல்லாம் வெறும் பேச்சு தான். அந்த சாஸன பூர்த்தி விஷயத்தில் நாக்கு நுனி முதல் நாபி வரையில் இரட்டைத் தீவட்டிகள் போட்டுப் பார்த்தாலும் எள்ளளவு கூட நிஜமே கிடை யாது. எல்லாம் மோசம். அவைகளுக்குப் பல வியாக் கியானங்கள் உண்டாய் விட்டன.

ஜப்பான் தேச முதல் ஐரோப்பிய துருக்கி வரையில் உலகமெங்கும் சுதந்திர அலைகள் வீசிக் கொண்டிருக் கின்றன. நமது பாரத மணித் திரு நாட்டிற்கும் இவ் வலையைக் கண்டவுடனே அமர்ந்திருந்த சுதந்திர விருப் பம் இதற்கு மறுபடியும் ஞாபகத்திற்கு வந்தது. மறு படியும் சுதந்திரக் கிளர்ச்சி யாரம்பித்திருக்கிறது.

நமது தேசம் சுதந்திரமடைய வேண்டியது நமது மேலான விருப்பம். அதிகாரம் செய்யும் அயலொரு நாட்டின்மேல் சார்புள்ளதாய் இருக்கக் கூடாது. பரி சுத்தமான சுதந்திரத் துவஜஸ்தம்பத்தில் பாரத சுய ராஜ்யக் கொடி விளங்க வேண்டும். அப்பொழுதுதான் ஏழைகளாக்கப் பட்டிருக்கும் பாரதர் தனிகர்களாக்கப் படுவார்கள். பலவீனர்களாக்கப்பட்ட பாரத புத்திரர்கள் பலசாலிகளாக்கப்படுவார்கள். ஆயுதங்கள் பிடுங்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டு நிராயுதபாணிகளாக்கப்பட்ட ஆரியர்கள் தேசத் தைக் காக்கும் சிறந்த போர் வீரர்களாகக் படுவார்கள். ஜனங்கள் பஞ்சத்தாலும் பசியாலும் பீடிக்கப்பட்டு அகால மரணத்துக்கு ஆளாகாமல் சுகமாய் முன் போல் வாழ்ந்து வருவார்கள்.அந்நியர்களின் அடங்காப்போட்டி யாலும் அடங்காச் செருக்காலும் வரியாலும் கொல்லப் பட்டிருக்கும் கைத்தொழில்கள் நன்கு தழைத்தோங்கும். பிழைப்புக்கு வழியுள்ள படிப்புகள் சிறுவர்களுக்கு நன்கு போதிக்கப்படும். அரசிறை வரியின் கொடுமை இப்போ திருப்பதுபோல் சகிக்க முடியாததாய் இராமல் தர்ம வரிகள் வசூல் செய்யப்படும். நாட்டிற்கு வீண் செலவு நேரிடாது. ஜனங்களிஷ்டப்படி தேச பரிபாலனம் நடக் கும்.. நாட்டின் காப்புக்காக நமது காப்புப் படைகளே நம்மவர்களைக் கொண்டு செய்துகொள்ளலாம். கரைச் சேனைகள் சேகரித்து ஏற்பாடு செய்து கொள்ளலாம். தேசத்தின் நவமணிகள் ஸ்ரீமான் திலகாதி மஹான்கள், தேசபக்தர்கள் முதலான சேவை செய்து வரும் திருத் தொண்டர்கள் அக்ரமமாய்த் திடீரென்று தேசநிர்வாசம் செய்யப்பட மாட்டார்கள்; தீவாந்திர சிக்ஷை விதிக்கப் பெற்றுத் தண்ணீர் மேல் ஏற்றி விடப்பட மாட்டார்கள். சிறைச் சாலைகளில் ராஜ நிந்தனை என்று பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டு அடைக்கப்பட மாட்டார்கள். நமது இந்தப் பாரத மகா நாட்டிலும் மற்றும் தென்னப் பிரிக்கா முதலான வெளி நாடுகளிலும் கூட நம்மவர்கள் அன்னியர்களால் கொடிய இம்சைகளுக்குட் படுத்தப்பட மாட்டார்கள். ஆனால் சரியான மரியாதையுடன் நடத் தப்படுவார்கள்.

நமது பாரத தேசம் சுதந்திர நாடாக வேண்டு மென்பதே நமது புருஷார்த்தத்தின் எல்லை. மற்ற ஜாதியார் தங்கள் தேசங்களில் எப்படி சுகமாய் வாழ்ந்து வருகிறார்களோ அப்படியே நமது பாரத நாட்டில் நாமும் வாழ வேண்டுமென்பதே நமது மேலான நோக்கம். எவ்வளவு நல்ல பூமியானாலும், எவ்வளவு நல்ல மரமா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னலும் (எந்த ஜாதியும்) அடக்கியாளும் அந்நிய மரத்து நிழலில் தழைத்தோங்கி வளர முடியாது. நமது முன்னோர்கள் அரசாட்சி செய்த காலத்தில் தேசம் எவ்வளவு நல்ல ஸ்திதியிலிருந்ததோ அத்தகைய உன்னத பதவிக்கு நமது ஸ்ரீ பாரத மாதாவை நாம் உயர்த்த வேண்டும். அதுதான் நாம் ஜன்மமெடுத்ததின் பலனாகும்.

பிரிவே பலவினம். ஐக்கியமே பலம்.

"ஜனனி ஜன்ம பூமிச்ச
ஸ்வர் காதபிகுரீ யஸி"

தாயும் தாய்நாடும் ஸ்வர்க்கத்தைவிட நமக்குப் பெருமை வாய்ந்தவைகள்.

8. நல்வழி

சுதந்திரமானது எத்தகையது என்பதை நாம் விளக்கிக் காட்டியிருக்கிறோம். பாரத நாட்டின் சுதந்திர உணர்ச்சியைப் பற்றி விவரித்திருக்கிறோம். இன்று சுதந்திரம் அவசியமான நல்வழி என்பதை எழுதுகிறோம். உலகத்தில் சுதந்திரமே ஒரு ஆனந்தம். உலகத்தில் சுதந்திரமில்லாமல் அயலாரின் கீழிருக்கும் அடிமைத்தனமே துக்கம். பிரதி மனுஷ்யன் விஷயத்திலும் இது எப்படி உண்மையோ அப்படியே ஒவ்வொரு தேச ஜனங்களின் விஷயத்திலும் உண்மையாகவே இருக்கின்றது. சுதந்திரமடைய விரும்புகிறவன் தன்னினத்திலாவது அயலினத்திலாவது நிர்த்தோஷியாய் இருக்கும் ஒருவனுக்கு வேணுமென்றே மனப்பூர்விகமாய் எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது. அப்படிச் செய்வதால் மகா பரிசுத்தமான சுதந்திரத்தை அவன் அபரிசுத்தப்படுத்து

[இந்தியா : 6-11-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறான். ஏனைய சுதந்திர ஸ்தாபகர்களின் முயற்சிக்குத் தடையாய் விடுகிறான். அவனை உலகம் பழிக்கும். ஆனால் ஒருவன் உண்மையான பக்தி சிரத்தையுடன் சுதந்திர மடைய அதற்கு வேண்டிய முயற்சிகளைப் பலவிதமான ஆபத்துக்கள் வந்தபோதிலும் மனந்தளராமல் திட சித்தத்துடன் கடவுள் கட்டளையென நம்பிச் செய்து வர வேண்டும். ஆனால் தற்காப்புக்காக அப்படிப்பட்டவன் நல்ல ஆபத்துக் காலத்தில் ஏதாவது மித மிஞ்சிச் செய்து விட்டாலும் அது ஒரு பிழையன்று.

"ஒருவன் தன்னுடைய நியாயமான சுதந்திர சம்ரக்ஷணைக்காகத் தனக்குத் தீங்கிழைக்க வரும் அயலான் மீது செய்யும் எந்த பலாத்காரமான காரியமும் உலக தர்மத்தை யொட்டிச் சரியானதே. சுதந்திரப் பிரியன் அயலானுக்கும் தன்னைப்பந்தம் விருப்பமா யுள்ள மானுஷீக இயற்கையுரிமையின் எல்லைகளைத் தாண்டக்கூடாது. அதாவது நிர்த்தோஷியான இதரன் எவனுக்கும் ஒரு தீங்கும் நேரிடாமலிருக்கும் பக்ஷத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னிச்சைப்படி சுதந்திரமாய்க் காரியங்களைச் செய்து கொள்ளலாம். எவனுவது சுதந் திரத்திற்கு விரோதமாய் வரம்புமீற ஆரம்பிக்கும்போது அதைத் தடை செய்ய வேண்டியது நியாயமே. அம் மாதிரி தடை செய்து எதிர்ப்பது நியாயமாயிருப்பது மன்றி அவசியமாகச் செய்ய வேண்டிய தென்பது உலக நீதியில் மனுஷ தர்மத்தால் விதிக்கப்பட்டிருக்கும் கடமை யேயாம். ஏனென்றால் நியாய வரம்பு மீறும் அக்ர மத்தைத் தடைசெய்து ஒழிக்காவிட்டால் அது ஒருவ னுடைய சொந்த (ஆத்ம) க்ஷேமத்திற்கும் லாபகரமான தன்று. அயலார்களுடைய க்ஷேமத்திற்கும் லாபகரமான தன்று. ஏனென்றால் மனிதனுய்ப் பிறந்தவன் கடவுளால் இயற்கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கும் புண்ணிய மான சுதந்திரத்தை அனுபவியாமல் அடிமைத் தனமான பரதந்திரத்தை யடைந்து விடுகிறபடியால் ஆத்ம லாபமில்லை. சன்மார்க்கத்தில் உலகம் நடக்கு மாறு உலகத்திற்கு ஓர் நிரந்தரமான உதாரணமாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருப்பதே மனித ஜென்மமெடுத்ததற்கு ஸார்த்தகமான் உத்தம ஸ்வரூபம். அதற்கு மாறுக நடப்பதால், தான் கெடுவதுமன்றி உலகத்தவர்களை இருவழியிலும் கெடுக்கிறான். கண்டிப்பாரில்லாவிட்டால் சுதந்திர விரோதிகளின் அக்ரமங்கள் அதிகப்படும். மற்றவர்களும் இந்த கெட்ட வழியைக் கைக்கொள்ளத் தைரியம் வந்து விடுகிறது.

சுதந்திர விருப்பமுள்ளவன் சாவதான வழிகளில் செய்யும் முயற்சிகளைக் கொடுங்கோலர்களான சுதந்திர விரோதிகள் தடை செய்து பல கொடிய தண்டனைகளை விதிப்பதால் வெடி குண்டு முதலிய பல உயிர்ச் சேத கரமான அநாரிய காரியங்கள் நடைபெறவும், ரகசிய சங்கங்கள் ஏற்படவும் காரணமாய் இருக்கிறது.

ஆகையால் சுதந்திரத்திற்கு இடைஞ்சலாய் வரம்பு மீறி நடப்பதைத் தடுத்துக் கண்டித்து அதை அடக்க வேண்டியதுதான் பரோபகாரமும் ஜீவகாருண்யமும் உள்ள உத்தமர்களின் லக்ஷணம். "சமூகத்தின் சுதந்திரத் திற்கு எதிராய் நிற்கும் கொடுங்கோலைத் தடுப்பதே மானிட கோடிகளுக்குப் பிரியமாயுள்ளதும் நாகரிகத் திற்கு அவசியமாயுள்ளதுமான தேச சேவையாம்" என்று உலக நீதி நிபுணர்களும் தத்வ சாஸ்திர விற்பன்னர்களும் உரைத்திருக்கின்றனர்.

ஸ்ரீ பகவான் உலகத்தில் அவதாரம் செய்து பல கொடுங்கோலர்களைப் பற்பல விதமாய் எச்சரித்தும் அவர்கள் கேளாதபடியால் சம்ஹரித்து பக்த ஜனங்களின் சுதந்திராதி தர்மங்களை ஸ்தாபித்திருக்கின்றார்.

"உத்திஷ்டத, ஜாக்ரத, ப்ராப்ய
வரான் நிபோதத"

என்று கடோபநிஷத் கூறுகின்றது. அதாவது "எழுந்திரு! விழித்துக்கொள்! சிரேஷ்டமானவைகளை அறிந்துகொள்!" என்பதே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த சுதந்திரமென்னும் ஆனந்தமானது பலஹீனன், பயங்காளி, தன்னலப் பேராசைக்காரன், கபடி, காட்டிக் கொடுத்துக் காசு வாங்கி வயிறு பிழைப் பவன், பயந்தவன், சோகி-இப்படிப்பட்டவர்களால் ஒருக்காலும் அடைய முடியாது. பணம், பட்டம், பரிவாரம், முகஸ்துதி, வெளிவேஷம், ஏமாற்றல். நடனம் இவற்றாலும் அடைய முடியாது. ஐக்கியம், மனோதிடம், பூரண விசுவாசம், ஆழ்ந்த சிரத்தை, தன்னலம் வெறுத்தல், பரித்தியாகம், பக்தி, ஸ்வஜனபிமானம் இவற்றால்தான் மகாபரிசுத்தமான சுதந்திர மென்னும் **திவ்ய ஆனந்த சாக்ஷாத்கார (நிஷ்பத்தி) நிலை அடைய முடியுமென்று உபநிஷத்துக்கள் உத்கோஷிக்கின்றன.**

குருக்ஷேத்திரத்திலே பாண்டவ-கௌரவ சேனா சமுத்திரங்களினிடையில் நின்றபோது பிரமித்து தேரின் மேல் காண்டீபத்துடன் மனந்தளர்ந்து அர்ஜுனன் சோகாக்ராந்தனாய் சாய்ந்து விட்டான். அப்போது சாரதியான ஸ்ரீபகவான் "நீ சுதந்திரமடைய வேண் டியது துர்யோதனாதியர்களின் அடிமையாய் இருக்கும் பரதந்திரம் இகபரங்களிரண்டிடத்திலும் துக்கம். உலகத்தில் தர்ம பரிபாலனம் செய்ய வேண்டியது உன் கடமை. நீ சுதந்திரமடைந்தால்தான் உத்தம அரசனாக இருந்து தர்ம பரிபாலனம் பண்ண முடியும். ஆகையால் சுதந்திரமடைய தைரியமாய் யுத்தம் செய். அதுதான் உனது கடமை" என்று உபதேசித்தார். அப்படிச் சொல்லியும் அர்ஜுனனுக்கு ஸ்ரீபகவான் வார்த்தையில் நிலை கொள்ளவில்லை. ஆகையால் ஸ்ரீபகவான் தனது திவ்விய விஸ்வ ரூபத்தைக் காட்டினார். அந்தக் காண்டற்கரியதும் ஆகாயமளாவியதும் ஆச்சரியகர மானதுமான திருவுருவுடன் அர்ஜுனனை நோக்கி ஸ்ரீபகவான் :—

"காலோஸ்மி .....
தஸ்மாத் வமுத்திஷ்டய சோ லபஸ்வ
ஜித்வா சத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம்ஸம்ருத்தம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நான் காலமாயிருக்கிறேன்—ஆதலால் நீ (யுத்தத் திற்கு) எழுந்திரு; சத்துருக்களை ஜெயித்துக் கீர்த்தி யடை; சகல போகங்களும் நிறைந்துள்ள ராஜ்யத்தை அனுபவி" என்று திருவாய் மலர்ந்து உபதேசித்தருளி யிருக்கிறார். சுதந்திரமடைய வேண்டியது அவசியம். சுதந்திரம் அடைந்தால்தான் தேசம் சுயராஜ்யமாகும். சுயராஜ்யமானால்தான் நாட்டிற்கு நன்மைகள் நாம் நன்கு செய்விக்கலாம். தேசத்தைப் போற்றி வாழலாம் என்பதற்கு இதைவிட நிஸ்ஸந்தேகமான தெய்வ ஆதாரம் நமக்கு என்ன வேண்டும்? ஸ்ரீ கிருஷ்ண பரமாத்வை பரம்பரையாகக் குலதெய்வமாகக் கொண்ட பாரத உத்தமர்களின் மரபில் வந்தவர்கள் அக்கடவுளின் கட்டளையை நிக்ரஹிக்க மாட்டார்கள். அதைச் சிரமேற் கொண்டு நடந்து வருவார்கள். கர்ம பாசங்களினின்றும் நீங்கி ஆத்மா சுதந்திரமடைய வேண்டுமென்பது உள்முகமான சுதந்திர விருப்பம். இதற்கு வெளிப் படையான சரீர சுதந்திரம் முதலில் அவசியம். அத்தகைய சுதந்திர அவசிய உணர்ச்சி தான் இப்போது பாரதத் திருநாடெங்கும் மறுபடி பரவி வருகிறது. கடவுள் கிருபையால் ஸ்ரீ சுதந்திர லக்ஷ்மி பாரதர்களுக்கு வெற்றி யருள் புரிவாளாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமத்துவம்

1. ஓர் விளக்கம்

சமத்துவம் என்றால் சம உணர்ச்சி என்பது பொருள். அதாவது தன்னுடைய சொந்த நன்மைக்காக ஒருவன் எப்படி நடப்பானோ அப்படியே எல்லாவிடங்களிலும் தானும் நடந்து கொள்வதுதான். அயலார் தன்னிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறானோ அப்படியே தானும் அவர்களிடம் நடந்து கொள்வதுதான். சமத்துவம் என்பது இயற்கையிலேயே கடவுளால் மனித சமூகத்திற்கு பிரசாதிக்கப் பட்டிருக்கும் திவ்விய கட்டளை. பரம கருணாநிதியான கடவுள் மனிதன்மேல் திருவுள்ளமுவந்து தந்திருக்கும் சுதந்திரமென்னும் திவ்விய நிபத்திற்கு சமத்துவமே தைலமாகும். சுதந்திரமடைவதற்கு வழியும், அடைந்த பின் அதைக் காப்பாற்றவும் ஒருவனுக்கோ, ஓர் ஜாதிக்கோ அவசியமாய் வேண்டியது சமத்துவமே. சமத்துவம்தான் ஒரு சுத்த ஜாதீய நிலையின் இரண்டாவது தத்துவம். சமத்துவமே ஜீவகாருண்யத்தின் அஸ்திவாரம். சமத்துவமே பரோபகாரத்தின் சாரம்.

[இந்தியா : 20-11-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த சமத்துவத்தை இயற்கையான கடவுள் சிருஷ்டியிலேயே காணலாம். உலகத்திலுள்ள எதையும் "நம்மைப் போலவேதானே அதுவும்" என்று எண்ணி நடத்தினால் அதற்கும் ஒரு சந்தோஷம்; நமக்கும் ஓர் மனமகிழ்ச்சி. ஓர் புஷ்பச் செடி இருக்கிறது. அதை நல்ல இடத்தில் வைத்து எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சினால் தான் அது நாம் விரும்பும் புஷ்பத்தைக் கொடுக்கும். நாம் அவ்வாறு அச்செடிக்கு ஏற்ற [illegible] செய்கிறோம்? மனிதன் சாப்பிடாமல் [illegible] உயிர் பிழைத் திருக்கமாட்டான். அதுபோலவே செடிக்கும் நீரிறைக்கா விட்டால் அது பட்டுப் போய் விடும் என்ற சரியான உள்ளுணர்ச்சியேயாம். கிளி முதலிய பக்ஷிகள், நாய், குதிரை முதலியவைகளிடத்திலேயும் இந்த உணர்ச்சி யினால்தான் பக்ஷமாய் ஆகாரம் போட்டு நடத்தி வருகிறோம். அசேதனங்கள் விஷயத்திலேயே இப்படி யென்றால் பகுத்தறிவுள்ள சேதனர்களான மனிதர்கள் விஷயத்தில் இந்த சமத்துவ உணர்ச்சி எவ்வளவு உண்மையா யிருக்கவேண்டும்? அதிலும் ஒரே தேசத்தில் பிறந்து வளர்ந்து வரும் ஒரு ஜாதியார்கள் விஷயத்தில் இந்த சமத்துவ உணர்ச்சி எவ்வளவு பொருத்தமானதாய் விளங்குகிறது. அதிலும் அநேக மகான்களும் காவலும் பிறந்து இந்த சமத்துவத்தை யனுஷ்டித்து மற்ற தேசத் தவர்களுக்கு இதை ஓர் சிறந்த உதாரணமாய்க் காட்டி நடந்து வந்த நமது பாரதர்களுக்கு இந்த சமத்துவ உணர்ச்சி எவ்வளவு அவசியமானது!

10287

சமத்துவம் என்பது ஒரு ஜாதிக்கு வெளியிலிருந்து கிடைக்க வேண்டியதன்று. ஒவ்வொரு மனிதனும் தன்து மனோபலத்தினாலேயே தான் இந்த சமத்துவ உணர்ச்சியை விருத்தி செய்து, அயலாரிடத்திலும் இந்த உணர்ச்சியை ஜ்வலிப்பிக்கச் செய்யவேண்டும். சமத்துவம் சாமான்யத்தில் பழக்கத்திற்கு வந்துவிடாது. அந்த உணர்ச்சியை நன்கு திடப்படுத்தி அநுஷ்டானத் திற்குக் கொண்டு வரும்போது பல தடைகள் சகஜமாய் உண்டாகும். உலகத்தில் புத்திமான் மூடனின் பிசகைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு மனமிரங்கி அந்தத் தப்பைத் திருத்திவைக்க முயல்வான். ஆனதினால் அந்த சமத்துவத்தைப் பழக்கி வரும்போது உண்டாகும் கஷ்டங்களை சுலபமாய் நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

மனித இயற்கையில் ஒருவன் பணக்காரன், மற்றொருவன் ஏழை என்றிருந்தாலும் சரி-ஒருவன் மூடன், மற்றொருவன் புத்திமான் என்றிருந்தாலும் சரி-பசிப்பிணி எல்லாருக்கும் உண்டு. சுகமாய் வாழவேண்டு மென்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டு. இது சுபாவமாய் ஒவ்வொருவர் மனத்திலும் உண்டாகக் கூடியதே. இதற்கு மாறுக ஒருவன் எப்பொழுதும் பணக்காரனுகவே இருந்துகொண்டு கடவுளின் கட்டளையான சமத்துவத்தைத் தனது பணச்செருக்கிலும் அதிகார அகந்தையிலும் மறந்து தன்னிச்சைப்படி மற்ற ஏழைகளைக் கொடுமையாக நடத்த ஆரம்பித்தானேயானால் அவன் செய்யும் பாதகத்திற்கு அளவேயில்லை. அவன் தனக்கே பெரிய ஆபத்துக்களை விளைவித்துக் கொள்ளுகிறான். ஏனென்றால் சமத்துவத்தைப் பழித்து நடப்பதால் அவன் சுதந்திரத்திற்கு விரோதியாகிறான்.

சமத்துவமானது நான்கு வடிவமாய் இருக்கிறது. அதாவது அன்பு, அருள், இரக்கம், அபிமானம் என்பவைகளேயாம். இந்நான்கினுள் அன்பானது தனக்குத் தெரிந்தவர்களிடத்தில் பிரீதி ரூபமாய் காட்டப்படும் சமத்துவம். அருளானது முகமறியாத ஒருவனிடத்தில் யாதொரு பிரதிப் பிரயோஜனமுமின்றி உள்ளமுவந்து காட்டப்படும் சமத்துவம். இரக்கமாவது தன்னிலுங் கீழ்ப்பட்டோரிடத்தில் உள்ளமுருகி உண்டாகும் பச்சாதாபத்தால் காட்டப்படும் சமத்துவம். அபிமானமாவது தன்னவர்களிடத்தில் ஒருவன் கட்டாயமாய்க் காட்டி நடக்கக் கடமைப்பட்டிருக்கும் சமத்துவம். சமத்துவம் எப்பொழுதும் மனித இயற்கையைச் சேர்ந்ததே தவிர ஜன சமூகத்துக்குச் செல்வம் முதலியவற்றுலுள்ள உயர்வு-தாழ்வு என்னும் வித்தியாசத்தைச் சேர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தல்ல. அந்த வித்தியாசமும் சமமாய் நிலவப்பட்டு, அதிலும் சமத்துவம் பாராட்டி வந்தால் மெத்த மேலானதே. அதுதான் சுவர்க்க பதவி. ஆனல் அத்தகைய சமத்துவம் அடைந்த பிறகு அதைக் காப் பாற்றிக்கொள்ள வேண்டியது பெரிய கடமையேயாம்.

சமத்துவத்தைக் கையாடி வரும்போது அதன் பரிசுத்த நோக்கத்தைக் கொஞ்சமேனும் கெடுத்துவிடக் கூடாது. மற்றொருவனுக்கு எவ்விதத் துன்பமும் விளை விக்கக் கூடாது. உலக நீதிக்குத் தகாத காரியங்களில் கூட சமத்துவத்தை உபயோகித்துவிடக் கூடாது. சர்வஜன சம்மதமான மார்க்கங்களில் சமத்துவத்தை அநுஷ்டிப்பதுதான் தர்மம்.

உலகத்தில் எந்த நாட்டில் சமத்துவம் அநுஷ்டிக்கப் பட்டு வருகிறதோ அந்த நாடுதான் சுவர்க்கம். அந்த நாட்டினர்கள்தான் உண்மையில் சந்தோஷமாய் மன மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். நாடெங்கும் செழித்து நன்மை தழைத்தோங்கும். கல்விப் பொருளிலும் செல்வப் பொருளிலும் குறைவில்லாத பாக்யவான் களுக்கும் புண்ய புருஷர்களுக்கும் உறைவிடமாயிருக்கும். மேதாவிகளான தேசாபிமானிகள் அறிவின் பெருக்கால் உண்டாகும் நன்மைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள லாம். அந்த நாட்டில் எளியதை வலியது நலியாது. ஒருவிதமான குறைக்காவது துர்நடத்தைக்காவது இடமிராது. நிர்ப்பயமாய் தேச சேவை செய்யப் பலர் முன்னுக்கு வருவார்கள். தர்மம் நான்கு பாதங்களு டனும் நடைபெறும். ஒருவிதத் துக்கமுமின்றி நிர்மல மான மனத்துடன் நற்கதி பெறலாம். ஜீவ தயாபரனை கடவுளை வணங்கலாம்.

சமத்துவமில்லாத தேசமே நரகம். ஏனென்றால் சமத்துவமிருந்தால், கொடுங்கோலுடன் அடக்கியாளும் சொந்த அரசனுக்காவது வேறு எந்த அரசனுக்காவது தன்னிச்சைப்படி அரசாங்கம் நடத்த அவகாசம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைக்கவே கிடைக்காது. தேசத்திற்காகப் பல பாடு பட்டு உழைத்துவரும் தேச பக்த சிரோன்மணிகளுக்குத் தேச நிர்வாசம், தூக்குத்தண்டனை, சிறைவாசம் முதலிய பல கொடிய தண்டனைகளைத் தன்னலங் கருதி துஷ்ட அரசாங்கம் அக்ரமமாய் விதிக்கும்படி நேரிடாது. அப்படி ஒரு சமயம் மீறி நேரிட்டாலும் அத்தகைய தண்டனை நிறைவேறுமலே போய்விடும்.

பூரண சமத்துவமிருந்தால் அந்த நாட்டில் நியாய ஸ்தலங்களும், கச்சேரிகளும், சிறைச்சாலைகளும் கூட இருக்கவேண்டிய அவசியமே யில்லை.

சமத்துவமுள்ள தேசத்தில் சாமான்யமான ஒரு வனும் அக்ரமமாய்ச் சிறையில் பிடித்தடைக்கப்பட மாட்டான் என்றுல் மகான்கள் விஷயத்தில் கேட் பானேன். தன்னலக்காரர்கள் இருக்கும் நாட்டில் சமத்துவம் இராது. தன்னலம் வெறுத்தவர்களிருக்கும் நாட்டில்தான் சமத்துவமிருக்கும். சமத்துவ ஞான மில்லாதவிடத்தில் பல துக்கங்களும் கஷ்டங்களும் நித்திய தரித்திரமும் தீராத நோய்களும் பல அபாயங் களும் அக்ரமங்களும் அநியாயமும் அநேக மோசங்களும் குடிகொண்டிருக்கும். சமத்துவ ஞானமிருக்கும் நாட்டில் இவைகள் ஜனங்களிடத்தில் நாடா. ஏனெனில் சமத்துவம் பரிசுத்தமானது.

ஆனபடியால் உள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்து தொலைத்து சமத்துவத்தை ஸ்தாபிக்க சுதேச ஜனங்க ளிடத்தில் அபிமானமும் கஷ்டப்படுவோரிடத்தில் கருணையும், சமயத்தில் கைம்மாறு கருதாமல் உதவி செய்யும் உதார குணமும், நாட்டின் நன்மைக்காகப் பிராணனையும் அர்ப்பிதம் செய்ய முன்னுக்கு வரும் திட சித்தமும் தேச பக்தியும் மனோவிசால மாண்பும் ஜன ஐக்கியமும் முக்கியமாய் வேண்டியவைகளே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பாரத உணர்ச்சி

இந்த சமத்துவமானது மெத்த பரிசுத்தமானது என்பதே நமது பாரத நாட்டினர் கொள்கை. இந்தப் பெரிய மனுவிசால மாண்பைப் பாரத மதங்களின் பிரதி சமயத்தவர்களும் உலக நன்மையை நாட்டிக் கடவுள் கட்டளை என்பதை ஜனங்கள் மனத்தில் நன்கு பதித்து நடக்குமாறு உபதேசித்தும், தாமே ஆசரித்தும் வந்தனர். இந்த சூக்ஷ்ம ரகசியமே பல வேத நூல்களிலும் அடுத்தடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது: கடவுள் நம் எல்லாரையும் காப்பாற்றி வருகிறார். உள்ளும் புறமும் வியாபித்திருப்பவரே கடவுள். கடவுள் சர்வ ஜீவன்களிலும் அந்தராத்மாவாகப் பிரகாசிக்கின்றார். கடவுள் சர்வ ஜீவதயாபரன். புண்ணியாத்மாவினிடத்திலும் பாபியினிடத்திலும் இந்துவினிடத்திலும் மகம்மதியனிடத்திலும் கிறிஸ்தவனிடத்திலும் பார்ஸியினிடத்திலும் ஆஸ்திகனிடத்திலும் நாஸ்திகனிடத்திலும் மகா ஞானியிடத்திலும் முழு மூடனிடத்திலும் ஏழையினிடத்திலும் பணக்காரனிடத்திலும் துஷ்டனிடத்திலும் சாந்தாத்மாவினிடத்திலும் (மற்ற சிருஷ்டிக்கப் பட்ட பிரபஞ்சத்திலும்) யாதொரு வித்தியாசமுமின்றி அந்தராத்மாவாகப் பிரகாசித்து வருகிறார் என்றே உலகத்து ஸர்வ மதங்களும் போதித்து வருகின்றன.

இத்தகைய திவ்விய உணர்ச்சி நெடுநாளாக நமது பாரத நாட்டில் நன்கு தழைத்தோங்கி வளர்ந்து வந்த படியால் நமது பாரத தேசம் ஜீவகாருண்யத்திற்கு நிரந்தரமான இருப்பிடமாயும் பரோபகார உதார தர்ம சிந்தை வடிவமாயும் விளங்கி வருகின்றது. உலகத்தில்

[இந்தியா : 27-11-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றெந்த தேசத்திலும் இத்தகைய தானதர்மங்களே கிடையாது. அவர்களுக்கு அதன் பூரண மகிமையும் தெரியவே தெரியாது. நமது நாட்டுப் பூர்விக அரசர்கள் தமது ராஜ்யங்களில் எவருக்கும் எவ்விதத் தீமையும் உண்டாகாமலிருக்கவும் தமது கீழ் உத்தியோகஸ்தர்கள் சரிவர தேச பரிபாலனத்தைத் திவ்விய சமத்துவ சிந்தையுடன் செய்து வருகிறார்களா இல்லையாவென்பது தாங்களே நேரில் கவனிப்பதற்காக மாறுவேடம் பூண்டு தேசங்களில் நடப்பதை நன்கு கவனித்து, சமத்துவத்தைச் சரியானபடி ஸ்தாபித்து நியாய பரிபாலனம் செய்து வந்தனர். மேலும் முக்காலமும் முன்பு விளக்கும் முற்றுந் துறந்த மூதறிஞர்களான முனிவரர்கள் உலக சுகத்தையும் வெறுத்துக் காட்டில் தவம் செய்து வருகையில்கூட, தங்கள் ஆசிரமங்களுக்கும் தபோவனங்களுக்கும் அகஸ்மாத்தாய் வந்தவர்களை நன்கு உபசரித்து சமத்துவ புத்தியுடன் ஆதரித்து வந்தனர். இவ்வளவு விரக்தியுடன் கூடிய முனிவர்கள் தங்கள் சீடர்களுக்கு யாதொரு சம்பளமுமின்றி இகத்துக்கும் பரத்துக்கும் சாதகமான விசேஷ குணமுள்ள படிப்பைப் போதித்து இந்த சமத்துவத்தை உலக யாத்திரையில் அவர்கள் நன்கனுஷ்டிக்குமாறு "சகலரும் கடவுளின் புதல்வர்கள்; ஆனதினால் சகலரும் சமானர்" என்ற உண்மையை அடிக்கடி வற்புறுத்தி விளக்கி வந்தனர். அரசர்களும் இந்த உண்மையைச் சிரமேற்கொண்டு நமது பாரத தேசத்தில் எல்லோருக்கும் பயன்படுமாறு தேவாலயங்களைக் கட்டுவித்தனர். தேவாலயத்திற்குள் ஜாதி பேதமில்லை. எல்லோரும் கடவுளைத் தொழலாம். பெரிய உத்சவங்களில் கோடிக் கணக்கான ஜனங்கள் ஒன்றுகூடி அதைக் கொண்டாடுகிறார்கள். அவ்விடத்தில் ஜாதி பேதமேயில்லை. ஏனென்றால் மோக்ஷ உலகத்தில் கடவுளின் திருச் சந்நிதானத்தில் ஜாதிமத பேதமில்லை. சகலரும் சமானர் என்னும் விசேஷமான சமத்துவ ஞானத்தை இந்த உத்சவங்களில் நிதர்சனப்படுத்திக் காட்டுகிறார்கள். இன்னும் நமது பாரத அரசர்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புண்ணிய சிந்தைக்கு நமது நாட்டிலிருக்கும் எண்ணிறந்த தர்மசாலைகளும் அன்ன சத்திரங்களும் விசாலமான பாதைகளும் தர்ம தோப்புகளும் குளங்களும் பிரயாணிகள் தங்குமிடங்களும் ஏராளமான (பிரத்தியட்சமான) அத்தாட்சிகளேயாம். இந்தத் திவ்விய சமத்துவ ஞானமிருந்தபடியால்தான் நமது தேசத்தில் முப்பத்திரண்டு விதமான தானங்கள் ஏற்பட்டிருந்தன. மேலும் எந்தத் தேவாலயத்திலும், எந்த சமஸ்தானத்திலும், எந்த சபையிலும், எந்த விசேஷ கூட்டத்திலும், எந்த ஆசீர்வாதத்தின் முடிவிலும், அனுக்கிரகம் என்னும் ஆசீர்வசனங்கள் சொல்லி முடிக்கும் போது,

"சர்வே ஜனஸ் ஸுகினோபவந்து"
"ஸமஸ்த ஸந் மங்களானி ஸந்து"

(எல்லா ஜனங்களும் சுகிகளாக இருக்கவேண்டும். நல்ல மங்களங்களெல்லாம் எல்லோருக்கும் உண்டான தாக) என்று கடைசி அனுக்கிரகம் சொல்லி முடிப்பதன் கருத்தும் இந்த சமத்துவ ஞானமேயாம். நல்ல அரசன் அரசாட்சியில் இந்த சமத்துவம் எப்படி பரிபூரணமாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததென்பதற்கு "புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடிக்க, வலியது எளியதை நலியாம லிருக்க அரசன் செங்கோல் நடாத்தி வந்தான்" என்ற ஒரு வாக்கியமே பெரிய நிதர்சனம். இவ்வளவு தூரம் சமத்துவ உணர்ச்சி நமது நாட்டில் பரவியிருந்ததினால் தான் ஜீவகாருண்யமும் பரோபகாரமும் தர்மசிந்தையும் நமது நாட்டில் இன்றும் இருந்து வருகின்றன.

நமது பாரத நாட்டில் இந்த சமத்துவம் முற்றிலும் கையாடி வரப்பட்ட தென்பதற்கு இன்னொரு நிதர்சனம் வெளி தேசத்தவர்கள் தங்கள் தேசத்து அரசர்களால் கொடுமையாய் நடத்தப்பட்டபோது நமது தேசத்தில் வந்து அடைக்கலம் புகுந்தனர். அப்போது நமது நாட்டினர் அவர்களுக்கு இடம், உணவு முதலிய ஆதரவுகள் கொடுத்து அவர்கள் சொந்த மதங்களையே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனுஷ்டிக்குமாறு சகாயம் செய்து வந்தனர். அம் மாதிரி நம்மவர்களிடத்தில் சகாயம் பெற்றவர்கள் பார்ஸிகள், சிரியர்கள், புராதன கிருஸ்துவர்கள் முதலானவர்கள். பிற்காலத்து மொகலாய அரசாட்சியில் இத்தகைய நன்மை பெற்றவர்கள் தானியர், ஓலாந்தர், போர்த்துகேசியர், பிராஞ்ஸியர், ஆங்கிலேயர்கள் முதலான ஐரோப்பிய ஜாதியார்கள்.

இந்த சமத்துவமானது எவ்வெப்பொழுது பிறழ நேரிட்டாலும் அப்பொழுதெல்லாம் பற்பல மகான்கள் தோன்றி இதை மறுபடியும் ஸ்தாபித்து வந்தனர். ஸ்ரீ புத்தரும், குருநானக் முதலானவர்கள் நமது நாட்டில் சுய ஜனபிமானமும் சுதந்திர ஞானமும் சமத்துவ பக்தியும் பூரணமாய் அசைக்க முடியாமல் ஸ்திரமாய் நிலைநாட்டப்பட்டிருந்தமையால் பாரதர்கள் இந்த சமத்துவ ரூபமான ஜீவ காருண்யத்தையும் பரோபகார சிந்தையையும் உலகம் முழுதும் பரவச் செய்து மற்ற நாடுகளையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்த இந்த உணர்ச்சியை ஊட்டி வளர்க்க ஏற்பாடு செய்தனர். அதில் பிரதானமானவர்கள் கபிலர், கௌதமர், ஜமதக்னி, பரசுராமர் முதலானவர்கள். பிற்காலத்தில் ஸ்ரீ புத்த பகவானும், அவருடைய மதத்தை வெகு பக்தியாய் அனுஷ்டித்து வந்த ஜீவகன், நாகார்ஜுனன், கனிஷ்கர், சைலாதித்யன். பிரிய தாஸனான அசோகன், பிம்பிசாரர் முதலான மகான்கள் தோன்றி அந்த சமத்துவ உணர்ச்சியை உலகெங்கும் பரவச்செய்து வந்தனர்.

மகமதுவும் இயேசு கிறிஸ்துவும் சமத்துவம் போதித்து அநேகரைத் தங்கள் மதங்களைத் தழுவச் செய் தனர். ஆனால் இவர்கள் பாரத நாட்டினர்கள் அல்லர். அப்படி யிருந்தும் இவர்கள் ஐரோப்பியர்களுமல்லர். இவர்கள் ஆசியர்களே. இவ்விருவர்கள் மதத்திற்கும் நமது பாரத நாட்டில் நானுகாரணங்களைக் கொண்டு பலர் உடன்பட்டனர். இப்படி யிருந்தும் இந்த மதஸ்தர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கெல்லாம் பாரதர்கள் தங்கள் பிராசீன ஜாதிய மகிமையான சமத்துவத்தையே காட்டி நடத்தி வருகிறார்கள்.

ஆனல் தற்காலத்தில் இந்த சமத்துவ உணர்ச்சியைக் கெடுக்க அன்னிய அரசாங்கம் பிரிடிஷ் இந்தியாவில் பல விசாரங்களை உண்டாக்கிவிட்டன. இந்து, மகமதிய விசாரம், இந்து - இந்துவல்லாதவர்கள் விசாரம், பிராம்மணன்-பிராமணனல்லாதவன் விசாரம், ராஜபக்தன், மிதவாதி, அதிவாதி விசாரம், வெடி வீசுபவன் விசாரம், முதலாளி - தொழிலாளி விசாரம் முதலான பல விசாரங்களையும் (problems) புதிய சீர்திருத்தமென்னும் உட்பிளவு உண்டாக்கும் வயணத்தையும் இப்பொழுது நமது பாரத நாட்டில் உண்டாக்கிவிட்டனர்.....இன்னும் பல துக்கங்கள் உண்டாயிருக்கின்றன. நாட்டினர் பலர் நாட்டின் பெருமையை மறந்து நழுவவிட்டனர். பலர் சமத்துவத்தை மறந்து தன்னலப் பேய் பிடித்துத் தேச பக்தர்களின் பேரிலும் ஏழைகளின் பேரிலும் பல தீங்கிழைத்து வருகின்றனர். ஆனல் பாரத தேச பக்தர்கள் தங்களுக்குப் பல கஷ்டங்கள் நேரிட்ட போதிலும் அவற்றையெல்லாம் லக்ஷியம் செய்யாமல், கண்டு மனம் சலியாமல், நிஜத்து உற்சாகம் குன்றுமல், திடபக்தியுடனும், விசேஷமான உறுதியுடனும், அவற்றை ஊக்கத்துடனும் நிறைந்த சுய ஜனபிமானத்துடன் பூரண ஐக்கியத்துடன் பாரத சுயராஜ்ய பெருமுயற்சியில் பரம கருணைநிதியான கடவுளின் பேரருளால் சமத்துவத்தையும் ஸ்ரீ பாரத மாதாவின் சேவையோடு சேர்த்து திருத்தொண்டு பூண்டு வருகின்றனர். ஸ்ரீ சுதந்திர லக்ஷ்மி இவர்களுக்குத் திருவருள் புரிவதாக! மறுபடியும் நாட்டில் சமத்துவம் நிலைநாட்டுவதாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. ஓர் நல்வழி

இதுவரையில் சமத்துவம் எத்தகையது என்பதைப் பற்றியும் அதை எப்படிக் கையாடி வருவது என்பதைப் பற்றியும் முதலில் கூறினேம். பிறகு பாரத நாட்டில் அந்த சமத்துவ உணர்ச்சியைப் பற்றி எழுதியிருந்தோம். இப்போது அந்த சமத்துவம் ஓர் நல்வழி என்பதை விளக்கிக் காட்டுவோம்.

உலகத்தில் ஒருவனே அல்லது ஒரு ஜாதியோ சுதந்திரமடைய சமத்துவம் அத்தியாவசியமானது. சுதந்திரத்தை யடைந்த பிறகு அதைக் காப்பாற்றவும் சமத்துவம் அவசியமானது. தங்கள் ஜாதி மத வேற்றுமைகளை அவரவர்கள் வீட்டிற்குள் மாத்திரம் வைத்துக் கொண்டு பொதுக் காரியங்களில் எல்லோரும் சமமென்று கருதியே உழைக்க வேண்டும். சமத்துவத்தை பொதுக்காரியங்களில் மறந்து விட்டால் பெரிய ஆபத்துக்கள் உண்டாகி சுதந்திர ஸ்தாபனமே கெட்டுப் போய்விடும். உலகத்தில் இந்த சமத்துவத்தை எல்லா ஜாதியார்களிடத்திலும் நிலைநாட்ட அநேகர் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கிளம்பினர். ஆனால் ஒருவராவது இதைப் பூர்த்தியாய்ச் செய்து முடிக்கவில்லை. சமத்துவத்தை யறிவது சுலபமாயினும் அதை நீடித்த நாள் கையாடிவருவது கஷ்டமென்று ஏற்படுகிறது. ஆதலினால் தான் பாரதநாட்டில் கடவுள் ஜனங்களுக்குள் தாமே பிறந்து இந்த சமத்துவத்தைப் போதித்து வந்தார். அத்துடன் நிற்காமல், பிற்காலத்தில் தமது அடியார்களை இப்பூமியில் பல ஜாதிகளிலும் பிறக்கச் செய்து இந்த சமத்துவத்தைப் பாரத நாட்டில் ரக்ஷித்து வந்தார். உலகத்திலுள்ள எல்லா வகுப்பினர்களுக்கும் மோக்ஷம் உண்டென்றும், கடவுள் திருஷ்டியில் சகலரும் சமானம் என்றும், ஆகையால் தேச ஜனங்கள் எல்லோரும்

[இந்தியா : 4-12-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமானர் என்றும், அவ்வடியார்கள் உபதேசித்தும் அநுஷ்டித்தும் வந்தனர். தென்னாட்டு ஆழ்வார்கள், நாயன்மார்கள், வடநாட்டு பக்தர்கள் முதலான சகல திருத்தொண்டர்களும் இதையே முன்னிலையாகக் கொண்டு உலகினில் நிதர்சனப்படுத்தி வந்தனர். இந்த ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் பிற்காலத்தவர்களான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசாரியார், ஸ்ரீமத் ராமானுஜ பகவத் பாதாசாரியார், ஸ்ரீமத் மாத்வ பகவத் பாதாசாரியார் முதலான பிரசித்த பாஷ்யகார ஆசிரியர்களும், குருநானக், குருகோவிந்த் முதலான சீர்திருத்தக்காரர்களும் இந்த சமத்துவ ஞானத்தையே பரவச் செய்து வந்தனர்.

இந்த சமத்துவத்தைக் கையாடி வருங்காலத்தில் ஆக்ஷேபணைக்கிடமாயும் உலக இயற்கை தர்மங்களின் வழிகளை மீறியும் அயலானுக்கு அநியாயமாய் வருத்த முண்டாகும்படியாயும் உள்ள எவ்வித செயலையும் செய்யவே கூடாது. அப்படிச் செய்வதால் அவன் சமத்துவத்திற்கே ஒரு சத்துருவாய் விடுகிறான். அவன் சமத்துவத்தை அழிக்கிறான். சமத்துவத்தை அசுத்தப்படுத்துகிறான். கடவுள் கட்டளையை மீறுகிறான். சமத்துவத்தை நன்கறிந்துணர்ந்து பழக்கப்படுத்தி ஆதரித்து வந்தால் அதன் திவ்விய சுகம் அப்பொழுதுதான் தெரியும். நாட்டில் கொலை, களவு முதலான துன்மார்க்கக் காரியங்கள் எள்ளளவும் நடைபெறாது. தேசத்திற்கு ஒரு அன்னிய ஆட்சியின் படையெழுச்சி என்றால் எல்லோரும் ஒருமித்துப் பொது சத்துருவைத் தொலைத்து விடலாம். ஒவ்வொருவனும் தன் தாய்த் திருநாடு விருத்தி யடையும் பொருட்டுச் செய்யவேண்டிய நன்மைகளை யெல்லாம் தாராளமாய்ச் செய்யலாம். சமத்துவ ஞானம் உண்டான வனுக்கே ஜீவகாருண்யமும் பரோபகார குணமும் இருக்க முடியும். அது இல்லாதவனே மூடன், மூர்க்கன், பாபிஷ்டன். அது இருப்பவனே புண்யாத்மா. அது இருக்கும் ஜாதியே தேவஜாதி. அந்த சமத்துவமே ஆனந்தம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமத்துவத்தையே ஒவ்வொருவனும் கையாட வேண்டும். கடவுளின் முன் சகலரும் சமானர். தொழில் முறைகளே யொட்டி வித்தியாசம் போல் காணப்படினும் மனித இயற்கையை யொட்டி சகலரும் சமானர். யோகிக்கும் ஞானிக்கும் சகலரும் சமானர். சமரச ஞானமே உலகினில் மனிதன் தெரிந்துகொள்ள வேண்டிய புருஷார்த்தம். "கீழோராயினும் தாழ உரை". சமத்துவத்தால் தேவர்கள் சுவர்க்கத்தில் வாசம் செய்து வருகின்றனர். "கடவுள் சகல ஜீவன்களிடத்திலும் சமமான கருணைகாட்டி வருகிறார். சமத்துவத்தை ஆசரித்தால் தான் நீ கடவுளுக்கு ஏற்ற பிரியனுவாய். சமத்துவந்தான் சுவர்க்க சந்தோஷம். சமத்துவம் இல்லாததே துக்கம். சமத்துவமே ஜீவகாருண்யம். ஜீவகாருண்யமே பரோபகார ஞானம். பரோபகாரமே கடவுள் திருவுள்ளம் உவந்த காரியம். ஆத்மாவை நன்கறிந்துகொள். ஆத்மாக்களில் உள்ளது சமத்துவம். மனிதன் எய்த வேண்டியது கடவுளுடன் சமத்துவம்" என்றே நமது தேசத்தின் ஆனந்த தத்துவ சேகரங்களான உபநிஷத்துக்களில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

யோகம் செய்யவேண்டியவன் முதலில் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்களில் சமத்துவம் முதன்மையானது. எவ்வுயிர்க்கும் இன்புறுவனவற்றைச் செய்வதற்கு சமத்துவம் அவசியம்.

சர்வத்ர சம தாஸ்திக்யம்

(எல்லாவிடத்திலும் சமமாய் நினைத்து நடப்பது) யோக நியமத்தின் உட்கருத்து. தன்னைப்போல எவ்வுயிரையும் எண்ணித் துன்புறுவனவற்றைச் செய்யாமல் சமமாய் நடத்தி வருவதே தூய்மையாம். "திருவொக்கும் தீதி லொழுக்கம்"—

"மாத்ருவத் பரதாரே ஷு
பரத்ரவ் யேஷு லோஷ்டவத்;
ஆத்மவத் ஸர்வ பூதேஷு
ய : ப் பச் யதி ஸபண்டித :"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பிறன் மனைவியை மாதாவாகவும், பிறன் பொருளை ஓடு போலவும், எல்லாவற்றையும் தன்னைப் போல எண்ணி நடப்பவனே புத்திமான்" என்று நீதி நூல்கள் கூறுகின்றன. தன்னுயிர் போல் மன்னுயிரைக் காப்பவன் உத்தம அரசன் என இதிகாசங்கள் கூறுகின்றன.

சுதந்திரக் கிளர்ச்சி பாரத நாட்டில் ஐம்பத் தொரு வருஷங்களுக்குமுன் உண்டானபோது, சமத்துவம் சம்பூரணமாய் இருந்தது. தன்னலம் வெறுத்து தேச சேவை செய்பவர்களே சமத்துவத்தை யனுஷ்டிக்க முடியும். சமத்வம் இருந்தால்தான் சுதந்திரம் அடைய முடியும். பாரதர்கள் பல்வேறு மதத்தவர்களாய் இருந்த போதிலும் எல்லோரும் ஏகோபித்து ஒற்றுமையுடன் தேச காரியங்களைப் பலவித கஷ்டங்களினிடையிலும் மனம் சலியாமல் திடபக்தியுடன் செய்து வருவார்களே யானால் சுயராஜ்யம் கட்டாயமாய் பாரதர்களுக்கே சித்தியாய்விடும். ஸ்ரீ பகவான் தமது கீதையில்,

"அஹமாத் மாகுடா கேச!
ஸர்வ பூதா சயஸ்தித"

(சர்வ பிராணிகளிடத்திலும் நானே அந்தராத்மா வாக இருக்கிறேன்) என்றருளி யிருக்கிறார். இதனால் சுதந்திர விரோதிகளையும் சமத்துவம் பாராட்டி நடத்த வேண்டுமென்பது கருதீதல்ல. ஆனால் அந்த சுதந்திர விரோதிகளின் பக்ஷம் பலத்து, அக்கிரமத்தில் பிரவேசிக் காதவரையில் சமத்துவம் பாராட்டலாம். அவ் விரோதிகள் வரம்பு மீற ஆரம்பிக்கும்போது அவர்களிட மிருக்கும் கருணையால் அவர்களை சமத்துவ வழியில் திரும்பச் செய்யவேண்டியது அவசியம். பாரதர்கள் தங்கள் தேசத்திய பிராசின ஆசாரமான சமத்துவத்தை மறந்து விடாமல் அநுஷ்டிப்பார்களாக. அம்மாதிரி அநுஷ்டிக்கும் தேச பக்தர்களுக்கு ஸ்ரீ சுதந்திர தேவி அருள்புரிவாளாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சகோதரத்துவம்

I. ஓர் விளக்கம்

சகோதரத்துவம் என்றால் எல்லோரையும் தனது சொந்த சகோதரர்கள் போல் பரிபூரணமாய் எண்ணி மனமார்ந்த விசுவாசத்துடன் நடத்தி வருவதேயாம். இதுதான் பெரிய புருஷார்த்தம். கடவுள் ஜீவகோடி களின் உள்ளமுவந்து தந்தருளியிருப்பது இந்த சகோத ரத்துவ உணர்ச்சியையே. இது மெத்த பரிசுத்தமானது. கருணைநிதியான கடவுளின் கட்டளை. இதை ஒவ்வொரு வரும் கைக்கொள்ள வேண்டும். சுதந்திரமடைவதற்கு இது ஓர் பெரிய சாதனம். நாட்டின் சுதந்திரத்தை நிலைநிறுத்திக் காத்து வருவதற்கு சகோதரத்துவமே சிறந்த வழியாகும். சகோதரத்துவமே ஒரு ஜாதியைத் துக்கமடையாமலிருக்கும்படி செய்விக்கும். சகோதரத் துவமே சந்தோஷ ஏதுவாகும். ஜனசமூகம் இதை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். அது நலம் பெற இதுவே வழி. இந்த சகோதரத்துவத்தின் மகிமையை மனித வாழ்க்கையின் இயற்கையில் காண்கிறோம். ஒரு தாய் வயிற்றில் பல குழந்தைகள் பிறக்கின்றன.

[இந்தியா : 11-12-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவைகளே யெல்லாம் பெற்றோர்கள் எவ்வளவு கவனத்துடன் காப்பாற்றுகிறார்கள். ஏதாவது ஒரு குழந்தையிடம் அதிக பக்ஷம் வைத்து மற்றொன்றைப் பகைக்கின்றார்களா? எல்லாக் குழந்தைகளையும் ஒன்றுபோல் பார்த்து, காப்பாற்றி வருகின்றனர். அக் குழந்தைகளும் பெரியவர்களானபோது தங்களுக்குள் பரஸ்பரம் பிரீதியுடன் வாழ்ந்து வருகின்றனர். இதைக் கண்டவர்களெல்லாம் "இந்த சகோதரர்கள் என்ன ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள் பார்த்தாயா! இவர்களைப் பெற்ற வயிறு என்ன பாக்கியம் செய்ததோ, என்ன புண்ணிய வசமோ!" என்று கொண்டாடுவதை ஒவ்வொருவரும் கண்டிருக்கிறார்கள்; கேட்டுமிருக்கிறார்கள். அவர்களின் சகோதரப் பான்மையே உலகம் அவர்களைத் துதிக்கக் காரணம். இதனால் உலகத்தவர்கள் மெச்ச சகோதரத்துவம் பாராட்ட வேண்டுமென்பது கருத்தல்ல; ஆனால் நல்லது கெட்டது என்பதை நாட்டில் நால்வர் சொல்லுகிறார்கள். இந்த சகோதரர்களுடைய மாசற்ற, பரிசுத்தமான மனோவிசால மாண்பே அவர்களுடைய சொந்த நன்மைக்கும் கீர்த்திக்கும் பெரிய காரணம். இது ஒவ்வொரு குடும்ப விஷயத்திலும் எவ்வளவு சரியோ அவ்வளவு ஒவ்வொரு ஜாதியின் விஷயத்திலும் சரியானதே. ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் எப்படி எவ்வித மாச்சரியமுமின்றி ஒற்றுமையாய்க் கலந்திருந்துகொண்டு தங்கள் வீட்டுக் காரியங்களைத் தலைக்குக் கொஞ்சமாய்க் கவனித்து சம்சார சக்கரத்தைச் சுலபமாய் நடத்திக் கொண்டு போவார்களோ அதே மாதிரியாய் ஒரு தேசத்தவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் சகோதர வாஞ்சை பாராட்டி நடந்து வந்தால், அந்த தேசம் அடையும் நன்மைகள் எண்ணிறந்தன. அந்த தேசத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் கடமை இன்னதென்பதை நன்கறிந்து நடப்பான். ஒவ்வொருவனும் மற்ற ஒவ்வொருவனையும் சகோதரனைக் கருதி நடத்தினால் அந்நாட்டில் பொய், களவு, வஞ்சகம், பேராசை, கொள்ளை, கொலை, அநீதி, கொடுங்கோல், அடக்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாள்ல், மிரட்டிப் பயமுறுத்தல், பல வாதனைக்குட் படுத்தல், தேச நிர்வாசம், தேசத்தின் ஜீவ ரத்தமான செல்வத்தை உறிஞ்சல், நியாய ஸ்தானங்களில் பக்ஷ பாதம், நிறத்தால் உயர்வு தாழ்வு, பொறுக்க முடியாத இம்சைகள், சித்திரவதைகள், சாதுக்கள்மேல் அடாப் பழி சுமத்தல், வேணுமென்றே பொய்ச்சாக்ஷி சொல் லுதல், தேச சகோதரனைக் காட்டிக் கொடுத்து காசு வாங்கிப் பிழைத்தல், அடிதடி, சண்டை, தேச ஜனங் களின் சுதந்திர உரிமைகளை அந்நாட்டினரின் அருமை பெருமை தெரியாத அன்னியன் தனது காலின்கீழ் போட்டு மிதித்து தேசத்தவர்களை அடிமைகளாக நடத்தல், வெளிநாடுகளில் இடுக்கண் படுத்தப்படல் முதலான அக்ரமச் செயல்களுக்கு இடமே கிடையாது. மேலும் ஜனங்கள் சகோதரத்துவம் பாராட்டினால் அந்நாட்டில் அதிகாரம் செலுத்த அந்நியன் கனவி லாவது கால் வைக்க முடியுமா? அப்படி யிருக்கையில் அந்தத் தேசத்தில் ஒருவித அக்கிரமமும் நடக்காது என்ப தற்குக் கேட்பானேன்? சகோதரத்துவம் விளங்கும் நாடே சகல போக போக்கியங்களும் நிறைந்த இந்திரலோகம். அந்நாட்டு ஜனங்களே தேவர்கள். சகோதரத்துவம் உள்ள நாட்டில் ஜனங்கள் பூரண சந்தோஷ சித்தர் களாய் இருப்பார்கள். நாட்டின் நலம் பெருகும். நன்மைகள் பல நடைபெறும் ஒவ்வொருவனும் தன் தன் கடமை இன்னதென்றும், அயலானிடத்தில் தான் நடந்து கொள்ளவேண்டிய கடமை இன்னவிதமென்றும் நன்கறிந்து நடந்து வருவான். தேசத்திற்கு ஒரு அபாயம் வரும் காலத்தில் அவனவன் தன் தன் சொந்த ரக்ஷணைக்காகவும், தனது தேச சகோதரர்களின் ரக்ஷணைக் காகவும் ஒன்றுசேர்ந்து அந்த அபாயத்தைத் தொலைத்து தேசத்தைக் காப்பாற்றலாம். ஸ்திரீகளின் கற்பும் ஜனங்களின் நியாயமும் யாதொரு ஆபத்துமின்றி நன்முய் பாதுகாக்கப்பட்டுவரும். பஞ்சத்தாலும், பசிப் பிணியாலும் வருந்தி அகால மரணத்திற்கு ஆளாகாமல் பூரண சந்தோஷத்துடன் தேஜஸ்விகளாய் விளங்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வார்கள். அத்தகைய ஜனசமூகத்தில் தெய்வத்தன்மை அகண்டமாக ஜ்வலிக்கும். தெய்வீகத்தன்மை குடி கொண்டிருக்கும் ஜனங்களிடத்தில் சகல சற்குணங்களும் பிரகாசிக்கும் என்பது உலகறிந்த உண்மையே.

நெருப்பைத் துரும்புகள் அணுகா. நிறை நெஞ் சுடையவனைத் தரித்திரம் அணுகாது. பரிசுத்தாத்துமா வைப் பாவங்கள் அணுகா. பலமுள்ளவனைத் துஷ்டர்கள் அணுகார்கள். சகோதரத்துவமுள்ள ஜாதியைத் துஷ்ட அன்னியன் அணுகான்.

ஆகையால் ஒவ்வொரு ஜாதியின் ஜனசமூகமும் கைக்கொண்டு அனுஷ்டிக்க வேண்டியது சகோதரத் துவமே. மின்னல்போல் தோன்றியழியும் இவ்வுடலுக்கு வரும் ஆபத்துகளும் துக்கங்களும் இம்சைகளும் கஷ்டங் களும் நஷ்டங்களும் கோடி கோடியாக வந்தபோதிலும் அவற்றை யெல்லாம் கண்டு உள்ளம் நடுங்காமல், தைரியத்தை விடாமல் உள்ளறிந்த ஊக்கத்துடன், விடாமுயற்சியுடனும், நிறைந்த பக்தியுடனும் ஒளிவீசும் விசால மனே நிலையுடனும் எடுத்த காரியத்தைக் கை சோரவிடாமல் முடித்து நாட்டின் நிலைமையை நாட்டச் சகோதரத்துவ மெனும் சரியான உணர்ச்சியே பெரிய சாதனமாம். ஒரே கடவுள் எல்லோரையும் படைத்தார். எல்லோரும் கடவுளின் மக்கள். ஆனதினால் எல்லோரும் சகோதரர்கள். ஆகையால் தெய்வீகமான இந்தச் சகோதரத்துவத்தை ஒவ்வொரு ஜாதியும் அநுஷ்டிக்க வேண்டிய-முக்கியமாய் தற்சமயம் பாரதர் அநுஷ்டிக்க வேண்டிய கடமையேயாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பாரத உணர்ச்சி

இந்தச் சகோதரத்துவமானது பாரத நாட்டில் முன்னுட்களிலும் அதி சமீப காலத்திலும்கூட இருந்து வந்தது. பாரதநாட்டு இதிகாச புராணங்களிலும் எண்ணிறந்த உதாரணங்கள் காணலாம். அத்தகைய ஜன சமூக மாண்பின் அடையாளங்களே இன்னும் நாம் பார்க்கலாம். எல்லாருக்கும் சர்வேசுவரனை கடவுளே தகப்பனர், ஸ்ரீ பாரத மாதாவே கருணைமிகுந்த தாய். பாரத நாட்டினர்கள் எல்லோரும் இவ்விருவர்களின் மக்களாதலால் எல்லோரும் சகோதரர்களே. ஆனதினால் ஒரு ஜாதியின் பல்வேறு பிரிவுகளையும் ஒன்றுசேர்ப்பது இந்த பரிசுத்தமான சகோதரத்துவமே. நாட்டின் நன்மைக்காகக் கடவுளால் இவ்வுலகத்திற்குத் தந்தருளியிருக்கப்பட்ட பெரிய வரப்பிரசாதங்களில் சகோதரத்துவமும் மெத்த முக்கியமானவைகளில் ஒன்று என்பதே பாரத நாட்டின் சனாதன உணர்ச்சி.

பாரத நாட்டின் சகோதரத்துவத்தை ஜனங்கள் மனத்தில் சரியாய் நிலைநாட்ட ஸ்ரீ ராமாயணமும் மகா பாரதமும் ஸ்ரீ புத்த பகவானின் சிறந்த மகா பரா நிப்பான ஸத் தந்தம் (மகா பரி நிர்வாண சித்தாந்தம்) மகா வாக்கிய ரத்னாவளி, நிஷ்கரமெண சூத்திரங்கள் முதலான நூல்களும் ஏற்பட்டிருக்கின்றன. பாரதநாட்டு மகாசநாதன நூல்களான வேதங்கள், உபநிஷத்துக்களிலும் இந்தச் சகோதரத்துவமே கூறப்பட்டிருக்கிறது, தனக்குச் சமானமாக அயலானையும் எண்ணிச் சமத்துவம் பாராட்டும்படி போதித்து வரும் பாரதநூல்களெல்லாம் இந்தச் சகோதரத்துவத்தையே விளக்கிக் காட்டுகின்றன.

பாரத நாட்டில் ஜாதி வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன வாகையால் சகோதரத்துவம் எப்படி நிலைத்

[இந்தியா : 18-12-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்கக் கூடுமென்று பலர் கருதலாம், அதற்குத் தக்க சமாதானம் அந்த ஏற்பாட்டிலேயே இருக்கின்றது அதில் பாரதநாடு மொத்தமும் ஒரு பெரிய வீடுபோல் கருதப் பட்டிருக்கிறது. நாட்டினர்கள் அந்த வீட்டிற்குடைய சகோதரர்கள். அந்த வீட்டிற்கு வேண்டியவைகளை யெல்லாம் ஒவ்வொருவனும் தனித் தனியாகச் செய்து கொள்ள முடியாது. ஆகையால் அவ்வீட்டிலுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி தொழில் ஏற்படுத்திக் கொண்டனர். ஒருவன் நாட்டின் நன்மையைக் கருதி தேச சகோதரர்களின் க்ஷேமத்திற்காகத் தனது இகலோக சுகங்களை வெறுத்து, எப்பொழுதும் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் சத்கர்மானுஷ்டானங்களை அநுஷ்டித்து சதா கடவுளை வணங்கித் துதித்து நாடு செழிக்க வேண்டியதற்கு அவசியமானவைகளைத் தனது சூக்கும புத்தி விசேஷத்தால் முக்காலத்தையும் உணர்ந்து அறிந்து தான் செய்தும், மற்றவர்களைச் செய்யும்படி உரைத்தும் வந்தான். வேறொருவன் நாட்டின் நன்மைக் காக அயலார் தனது தேச சகோதரர்களை வருத்தாம லிருக்கும்படிக்கும் நாட்டில் சகோதரத்துவத்திற்குப் பங்கம் வராமலிருக்கும்படிக்கும் காத்து ரக்ஷிக்க வாள் வலியுடன் கூடிய தோள்வலியுடன் விளங்கி தேச பரிபாலனம் செய்து வந்தான். மற்றொருவன் தேச நன்மைக்காகத் திரைகடலோடியும் சென்று நானா தேசத்து சாமான்களையும் நாட்டினர் நன்மைக்காகக் கொணர்ந்து கொடுத்து வந்தும் உதவி செய்து வந்தான். இன்னொருவன் நிலத்தைக் கிருஷி செய்து நாட்டின் சகோதரர்களின் உணவுக்காக வேண்டியவைகளைக் கொடுத்து உதவி செய்து கொண்டு வந்தான்.

இதரர்கள் நாட்டில் சகோதரர்களுக்கு வேண்டிய தட்டுமுட்டு சாமான்கள் முதல் ஆடை, ஆபரணங்கள், மாட மாளிகைகள், கூடகோபுரங்கள் வரையில் உள்ள எல்லாவற்றையும் செய்துகொடுத்து உதவி செய்து வந்தனர். ஆனபடியால் நாட்டில் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு சகோதரப்பான்மை பாராட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தனர். இதனால்தான் அவனவன் தன்தன் தருமத்தைச் செய்ய வேண்டுமென்ற விதி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சகோதரத்துவம் அழியாமல் அதை ரக்ஷித்து வருவதற் காகவே அவனவன் தன்தன் முன்னோர்களின் தொழிலைச் செய்து வரவேண்டியதென்று சாஸ்திரங்களிற் கூறப்பட் டிருக்கிறது. அவனவன் தனக்கு என்று ஏற்பட்டிருக்கும் தருமத்தையே கட்டாயமாய்ச்செய்துவரவேண்டுமென்ற தர்மானுஷ்டான ரகசியமே ஸ்ரீபகவான் தமது கீதையில் உபதேசித்திருக்கிறார். அதை எல்லாரும் அநுஷ்டிக்க வேண்டுமென்பது நமது மதத்தின் முக்கிய கருத்து. அத்தகைய சகோதரத்துவமானது பாரத நாட்டில் பூரணமாய் இருந்துகொண்டே வந்தது.

பிற்பாடு நமது பாரத நாட்டில் அன்னியர்களின் சேர்க்கையால் இந்த சகோதரத்துவ உணர்ச்சிக்குப் பல இடையூறுகள் உண்டாகி அது வெகுவாய் அழிக்கப் பட்டது. ஆனால் நமது தேசத்தில் இப்பொழுதுகூட பெரியவர்களைச் சிறுவர்கள், 'அண்ணா! அப்பா!' என்றும், பெரியவர்கள் சிறியவர்களைத் 'தம்பி!' என்றும் அழைத்து வருகின்றதை பிரதி தினத்திலும் பார்த்து வருகிறோம். இதுதான் நமது பிராசீன சநாதன சகோதரத்துவத்தின் சில அடையாளம். 1857 ம் வருஷத்தில் உண்டான இந்துஸ்தான் சுதந்திர யுத்த காலத்தில் இருந்த சகோதரத்துவம்கூட இப்போது மிக மலினமடைந்து வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் நமது பாரத நாட்டில் சமீபத்தில் உண்டான நவீன கிளர்ச்சியானது ஆரம்பித்த நாள் முதல் இந்தச் சகோதரத்துவம் மறுபடியும் தழைத்தோங்கி வளர்ந்து கொண்டே வருகிறது. இதற்கு எண்ணிறந்த தடைகள் எதிர்பார்த்திரா வண்ணமாய் சம்பவித்த போதிலும் ஸ்ரீ பாரத மாதாவின் திருவுள்ளமுவந்த தேச பக்தர்கள், தங்கள் சுயராஜ்ய ஸ்தாபகத்திற்காக இந்த மிகவும் பரிசுத்தமான சகோதரத்துவத்தையே தாங்கள் அனுஷ் டித்தும் மற்ற பல தேச சகோதரர்களையும் உள்ளூர அநுஷ்டிக்கச் சொல்லியும் வருகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பாரத பக்தர்களின் இத்தகைய முயற்சி களுக்கெல்லாம் இழைக்கப்படும் கோடிக்கணக்கான துன்பங்களை யெல்லாம் தேச பக்தர்கள் இன்பமாகக் கொண்டே விசேஷ மனோதிடத்துடனும் ஆழ்ந்த சுய ஜனபிமானத்துடனும் பூரண தேச விசுவாசத்துடனும் தாய்த் திரு நாட்டிற்குத் தொண்டுபூண்டு, தேச சேவை செய்து வருகின்றனர். பரம கருணாநிதியான கடவுள் கிருபையால் இப்மாதிரியான தேச பக்தர்களின் கூட்டம் மேன்மேலும் அதிகரிப்பதற்கு ஸ்ரீ பாரத சுயராஜ்ய-சுதந்திர லக்ஷ்மி அவர்களுக்குத் திருவருள் புரிவாளாக. நம் நாட்டின் சகோதரர்கள் நலம் பெறுவதாக! அநாதி யான பாரத சனாதன சகோதரத்துவ தர்மம் நாட்டில் நிலைபெற்று செழித்தோங்கி வளரக் கடவது.

10287

பாரத உணர்ச்சி (2)

சகோதரத்துவம் என்பது ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்குள் இருக்கும்படியான அதிக சிநேக உணர்ச்சியைக் குறிப்பிடுகிறது. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் இயற்கையிலேயே ஒரே நடத்தையுள்ளவர்களாயும், தமது தாயினுல் ஒரே மாதிரி யான புத்திமதிகளை ஊட்டப்பெற்றவர்களாயும், அதே தாயினிடத்தில் அன்பு செலுத்தி அவளைச் சந்தோஷிப் பிக்கக் கடமைப்பட்டவர்களாயுமிருப்பதால் அவர்களுக் குள் ஒருவித அந்யோந்ய சிநேகம் தானுகவே உண்டா கின்றது. இவ்விதமாக ஒருவருக்கொருவர் பாராட்டும் நட்புத்தான் சகோதரத்துவம். உலகத்திலே உயிரில்லாத வஸ்துக்கள்கூட ஒரே இயற்கையுள்ளவைகளானுல் ஒரு இடத்தில் சேருகின்றன. பூமியில் பொன் எடுக்கும் சுரங்கங்களில் இதர உலோகங்கள் விசேஷமாகக் கிடைக்கமாட்டா. இரும்புக் கனிகளில் இரும்புதான்

[இந்தியா : 25-12-1909]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைக்கும். அசேதன வஸ்துக்களே இம்மாதிரி ஒன்றுகக் குவியும் தன்மையுள. உயிருள்ளவைகளுக்குள் முதன்மை யான மனிதனிடத்தில் எவ்வளவு ஆழ்ந்திருக்க வேண்டும்? சாதாரணமாக மனிதர்களிடத்தில் இச் சகோ தர உணர்ச்சி இயற்கையிலேயே உண்டு. ஆனல் சில நூற்றாண்டுகளாக நமது பாரத தேசத்தில் இவ்வுணர்ச்சி குறைந்துகொண்டே வருகிறது. இதற்குக் காரணங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளில் இப்பொழுது முக்கிய மாகத் தென்படுவது சுயநல இச்சைதான். ஒருவன் சுயநலத்தை நாடி அதுவே யோசனையாக இருக்கும் பொழுது அயலாரின் சுக துக்கங்களுக்காகப் பாடுபடு வதற்கு அவகாசமிராது. ஒரே தாயின் வயிற்றில் பிறந்த போதிலும் அவளை மறந்து விட்டுத் தான் சுக மடைய வேணுமென்றிருப்பவன் தன் சகோதரர்களின் துயரங்களை நீக்க இயலுவானு? தாயினிடத்து அன்பினு லல்லவோ சகோதரர்களை நேசிக்கிறன். தாயையே மறப்பவர்களுக்குச் சகோதரர்களேது? இம்மாதிரியான ஒருவனுக்கு, தன் சகோதரர்களுக்கும் அயலார்களுக்கும் உள்ள வித்தியாசமே தெரியாது. இதே அயலார்கள் தன்னுடைய சுயநலத்துக்கு ஏதாவது உதவி புரியும் பக்ஷத்தில் அவர்கள் அவனுடைய சகோதரர்களைவிட அநேக மடங்கு புகழத் தகுந்தவர்களாய் விடுகின் றர்கள்.

மகா தாழ்மையான சுயநலத்தை அடைய வேண்டு மென்கிற இந்தப் பேராசைதான் நம் பாரத பூமியில் வெகுநாளாகப் பரவிக்கொண்டு வருகிறது. நம் பாரத தேவியின் தற்கால இழிவு நிலைமைக்குக் காரணம் அவள் புத்திரர்களாகிய நாம ஒவ்வொருவரும் நம் நம் தேக சுகங்களைத் தேடிக் கொண்டு நமக்குள்ளிருக்க வேண்டிய சகோதர நட்பைக் கைவிட்டதுதான்.

வெகு காலமாக நம்மைச் சூழ்ந்துகொண்டு நாசம் செய்யும் சனீஸ்வரனுகிய சுயநல வேட்கைதான்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்காலத்தில் கனூஜா ராஜாவுக்கும் டில்லி ராஜாவுக்கும் விரோதம் மூட்டியது. அன்னியநாட்டு அரசனுகிய ஷஹாபுத்தீன் கோரி என்பவனுக்கு நமனைப் போலிருந்து, அசகாய சூரனுய் ஏகசக்ராதிபதியாய் விளங்கிய பிரதிவீ ராஜனை கனூஜா ராஜாவாகிய ஜயசந்து ஏன் நாசம் செய்ய எத்தனித்தான்! பிரதிவீராஜன் அடைந்த கீர்த்தியைத் தானடைய வேண்டுமென்றும் மகா பிரக்யாதியோடிருக்கும் டில்லி நகரத்தைத் தான் கவர வேண்டு மென்கிற துராசையினுலும் இவன் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தபோதிலும் அன்னியனுகிய ஷஹாபுத்தீனிடத்தில் கெஞ்சி உதவி கேட்க வேண்டியதாயிற்று. பெரிய வம்சத்தைச் சேர்ந்தவனுயும் பாரத தேசத்தை அன்னிய தேசத்தார்களினின்று ரக்ஷிப்பதே பரம்பரை தர்மமாகப் பூண்டவனுயுமிருந்த இந்த கனூஜா அரசன் வெட்கம், மானம், குலம், கோத்திரம், ஜன்மபூமி எல்லாவற்றையும் மறந்துவிட்டு அன்னியனுகிய ஷஹாபுத்தீனை இந்தப் புண்ணிய பூமிக்குள் அழைத்து வந்து, பிறகு அவனுலேயே தானும் நாசமடைந்தான். இப்படியெல்லாம் செய்த இந்தச்சுயநலப் பிரியத்தின் வலியைப் பார்த்தால் நாம் எல்லோரும் எவ்வளவு ஜாக்கிரதையாய் அதைத் தொலைக்க வேண்டுமென்பது விளங்கும். சுமார் 150 வருஷங்களுக்கு முன் வங்காளத்தில் இதே மாதிரி ஒரு கோரமான காரியம் நடந்தேறியது. மீர் ஜாபர் என்னும் நீசன் தன் சுயநலத்தைக் கருதி, தன்னையொரு பொருளாக்கிவைத்த அரசனுக்குத் துரோகம் செய்து அவனுடைய ஆட்சியை வியாபாரிகளென்று வெளி வேஷம் பூண்டு நம் தேச முழுவதும் கலக மூட்டிய ஈஸ்டு இந்தியா கம்பெனியாரிடம் ஒப்புவித்துவிட்டான். இந்தத் துரோகியும் தான் செய்த இந்த மகாபாதகத்தின் பொருட்டு பெருந்துக்கத்திலேயே நாட்களைக் கழித்தான். முஸ்லீம்களுக்குள் இருக்க வேண்டிய சகோதர நட்புக்கு அளவேயில்லை. அவர்கள் அன்னிய மதஸ்தர்களாகிய கிருஸ்தவர்களோடு ஒரு மாதிரியான நட்பும் பாராட்டக் கூடாதென்னும் கொள்கை அந்த நாட்களிலிருந்தது;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்படி யிருந்தும் இந்த மீர்ஜாபர் தனக்கு அரசனுயும் முஸ்லீமாயுமிருந்த சிராஜ்ஜுத்தவுலாவை நம்பிக்கைத் துரோகம் செய்து ஆங்கிலேயரிடத்தில் தேசத்தை ஒப்பு விக்கும்படி செய்த லோபத்தின் வலிவுக்கு அளவுண்டா?

மேலும் இந்நாளிலே நம்மவர்களில் அனேகர் சுய நலத்தின்பொருட்டு அன்னியர்களுக்கு நம்மவர்களைக் காட்டிக் கொடுக்கிறதில்லையா? தன் தாய் நாட்டுக்காக உழைப்பவன் ஒருவனிருந்தால் அவனை அன்னியர் களுக்குச் சுட்டிக்காட்டப் பத்துப் பேர் இருக்கிறார்கள். இப்படியிருக்க இந்நாட்டில் சகோதரத்துவம் எவ்வாறு நிலைபெறும் என்று சமுசயிக்க வேண்டியதாய் இருக் கிறது. இந்த ஸ்திதியைக் கண்டுதான் நம்மவர்களில் அநேகர் "நாம் சுயராஜ்யம் எப்படி அடைவோம், நமக்குள் ஒற்றுமையில்லையே, ஒருவரை யொருவர் நேசித்தாலல்லவோ நாம் ஒன்றுகூடலாம்" என் கிறார்கள். தற்கால நிலையைப் பார்த்தால் இது உண்மை போலக் காணப்படுகிறது.

ஆனல் ஒன்று, இப்பொழுது நாம் தாழ்ந்த நிலைமை யில் இருப்பதின் நிமித்தமானல் நம்மவர்களில் சுய நலத்தை நாடி அன்னியர்களுக்கு உதவிபுரிபவர்கள் உன்னத ஸ்திதியிலிருப்பதினலும் சகோதரத்துவம் நமக்குள் விருத்தியாக வேண்டுமென்று பாடுபடுகிற வர்கள் கஷ்டதசையிலிப்பதனலும் நம் தாயாகிய பாரத தேவி தன் குழந்தைகளுக்குச் சகோதர நட்பை ஊட்ட மறந்து விட்டாளோ என்று நினைக்கவேண்டிய தாய் இருக்கிறது. இது வாஸ்தவமல்ல என்பது சற்று நின்று யோசிப்பவர்களுக் கெல்லாம் விளங்கும். நம்ம வர்களில் உயர்ந்த நிலையிலிருப்பவர்களின் கணக்கு மிகவும் சொல்பம். இவர்களுக்குள் இவ்விதமான விசுவாசமும் கிடையாது. தங்களுடைய உன்னத பதவிக்கு அன்னியர்கள் காரணமானபடியால் அவர்க ளிடத்தில் ஒரு பொய் விசுவாசம் பாராட்டுகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தங்களுக்குள் ஒருவரையொருவர் பொறுமையோடும் சமுசயத்தோடும் கண்டு தங்களுக்குள்ளேயே தீங்கு இழைத்துக்கொள்கிறார்கள். ஆகையால் தான் இவர்களுடைய உன்னத நிலை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. இச்சிறு தொகையான ஜனங்களை விட்டுவிட்டால் மிகுதியாய் இருக்கும் பாரத புத்திரர்களிடத்தில் சகோதரத்துவம் குடிகொண்டே இருக்கிறது. பாரதமாதா அவர்களைக் கைவிட்டுவிடுவதில்லை. அவர்கள் எந்த ஜாதியாராயினும், எந்த மதஸ்தர்களாயினும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொண்டு தங்களுடைய ஜீவனத்தை நடத்தி வருகிறார்கள். ஜீவனம் வர வர கஷ்டமாய்க்கொண்டு வந்தாலும் தங்களால் இயன்றமட்டும் உதவி புரிந்துகொண்டே வருகிறார்கள். பெரும்பான்மையோர் அபிவிருத்தியாய் வரும் நம் கஷ்டத்தின் நிஜமான காரணத்தை அறியாததினால் தங்கள் தலைவிதிமேல் பழியைப்போட்டுத் துன்பப்படுகிறவர்களுக்குத் தங்களால் இயன்ற உதவி புரிந்து வருகிறார்கள். வேறு சிலர் இம்மாதிரி நம் ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகரித்துக்கொண்டு வந்தால் நம் ஜாதி மரித்துவிடும் என்பதை அறிந்து இக் கஷ்டங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாகிய அன்னிய அரசாட்சியை மெல்ல நீக்க எண்ணங்கொண்டு பாடுபடுகிறார்கள். இச் சிலரைக் கண்டால் நம் ஜனங்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இவர்களுக்கு வேண்டிய உதவி செய்கிறார்கள். மனப்பூர்வமாக வாழ்த்துகிறார்கள். தற்கால கவர்ன்மெண்டார் என்ன செய்வார்களோ என்று அஞ்சி மறைவாக உதவிபுரிந்த போதிலும் அது சகோதர உணர்ச்சியைக் காட்டுகிறதில்லையா? இவ்வுணர்ச்சியை முழுதும் அறிய வேண்டுவோர் நம் ஜனங்களுக்குத் தற்கால கவர்ன்மெண்டார்களிடத்தில் இருக்கும் பொய் அச்சத்தை நீக்கிவிட்டால் தெரியும் சில மாறுபாடுகளினால் அந்த உணர்ச்சி மேலிடாமல் இருக்கிறது. அந்த மாறுபாடலில் முதன்மையானது வீண் அச்சம். அதைப் பாரத புத்திரர்கள் தொலைத்துவிட்டால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்பு அவர்களில் இயற்கையான சகோதரத்துவம் பிரகாசிக்கும். நம்முடைய இந்தியா, என்று சகோதரத்துவ உணர்ச்சியால் நிறைக்கப்படுகிறதோ அன்று அவள் புத்திரர்களுடைய மனோரதத்தைத் தடுக்க யாரால் முடியும்?

8. ஓர் நல்வழி

இதுவரையில் நாம் சகோதரத்துவம் என்னதென் பதைப் பற்றியும் அதைப் பாரத நாட்டினர்கள் எவ்வாறு அநுஷ்டித்து வந்தனர் என்றும் கூறியிருக்கிறோம்.

இனி இந்த சகோதரத்துவம் என்பது மெத்த பரிசுத்தமான கடவுளின் கட்டளை; இதை அநுஷ்டிக்க வேண்டியது ஜன சமூகத்தின் முக்கிய கடமை. பாரத சனாதன தர்மமான இந்த சகோதரத்துவத்தைப் பாரத நாட்டினர் மறுபடியும் சம்பூரணமாய்க் கைக்கொண்டு அநுஷ்டித்தால்தான் இவர்கள் சுதந்திரம் அடைய முடியும். அயல்நாடுகளில் இவர்களுக்குச் சமத்துவம் கிடைக்கும். தேசத்தின் ஜனங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்துவர முடியும். 'இதுதான் மனிதன் எய்த வேண்டிய புருஷார்த்தம்' என்பதை விளக்கிச் சகோதரத்துவமே ஒரு ஜாதியின் மேன்மைக்கு அவசியமான நல்வழி என்பதை எடுத்துக்காட்டுவோம். சகோதரத்துவம்தான் சமதர்மத்தைப் பூர்த்தி செய்விக்கும் புனிதமுறை. சகோதரத்துவம் விளங்கும் தேசமே சுவர்க்கலோகம். சர்வானந்த மயமான புண்ணிய பூமி. கடவுள் அந்நாட்டில்தான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து தொண்டர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்விப்பார். சகோதரத்துவமே எய்தற்கரிய மேன்மை. ஜாதீய ஜன சமூகத்தின் அஸ்திவாரக் கல். ஜன

[இந்தியா : 1-1-1910]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐக்கியத்தின் அழியாக் கோட்டை. அன்பின் அருமை யான வடிவம், சர்வ உத்தமமானது.

உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் இந்த சகோதரத்துவத்தையே போதிக்கிறது. ஒரு ஜாதிக்கு சகோதரத்துவம் ஸ்தாபிக்கப்படவேண்டுமானால் அதற்கு எண்ணிறந்த தடைகள் உண்டாகின்றன. **"சிரேயாம்ஸி பகுவிக்நானி"** என்றபடி நல்ல காரியத்திற்குத்தான் உலகத்தில் அநேக தடங்கல்கள் உண்டாகின்றன. ஒரு தேசத்திற்குச் சுய ஆட்சி அவசியம். சுய ஆட்சியை விரும்பும் ஜாதிக்கு சம்பூரண சுதந்திரம் வேண்டும். சுதந்திரம் அடைய தேசத்தவர்களுள் சமத்துவம் வேண்டும். சமத்துவம் பாராட்டி நாட்டினரை நடத்திவர சகோதரத்துவம் வேண்டும். சகோதரத்துவம் சம்பூரண மாய் இருந்தால்தான் சுய ஜனபிமானம் உண்டாகும். சுய ஜனபிமானம் உண்டானால்தான் தேச பக்தி தழைத்து ஓங்கி வளரும். தேச பக்தி வளர்ந்தால்தான் நாட்டினர் நலம் பெறுவர். அப்பொழுதுதான் நாடு செழித்தோங்கும். நாட்டின் பெயர் உலகத்திற் கெல்லாம் ஒரு கண்ணியமான பேராய் இருக்கும். அப்படி இருந்தால்தான் அந்த தேசத்தவர்களிடத்தில் வெளிநாடுகளில் எங்கு சென்றாலும் மரியாதையுண்டு; செல்வாக்கு உண்டு; சகாயம் உண்டு; சுய கௌரவம் உண்டு; சந்தோஷம் உண்டு; சம்பத்து உண்டு; ஜனப் பரிவு உண்டு; அனந்த சௌகரியங்களும் உண்டு.

சகோதரத்துவமானது ஒரு நாட்டில் நிறுத்தப் பட்டால் அந்நாட்டில் எல்லாம் கிரமமாக நடைபெறும். ஜனங்களுக்கு சந்தோஷகரமான சர்வானுகூலங்களும் உண்டு. இது ஒவ்வொரு தேசத்திலும் நிலைநாட்டப்பட்ட பிறகு, நாடுகளுக்கு நாடுகள் சகோதரத்துவம் பாராட்ட வேண்டும். அப்படி சகோதரத்துவம் காட்டி நடந்து வந்தால், உலகத்தில் போர்க்கப்பல்கள், தரைப் படைகள், யுத்தக் கருவிகள் முதலான ராணுவப்படை கலங்களுக்கு வேலையே இல்லை. அவனவன் தன்தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிரமமான அளவுக்குள் இருந்துகொண்டு உலகத்தில் சந்தோஷமாகத் தனது வாழ்நாளைக் கழித்துச் சுகமாய் வாழ்ந்து வருவான். நியாய ஸ்தலங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் காவல் கிடங்குகளுக்கும் அந்நாட்டில் வேலையே இல்லை.

ஒரே தேச மாதாவின் மக்கள் ஒவ்வொரு நாட்டினரும் என்பதே நமது ஆரிய சனாதன நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. சம்பூரண சகோதரத்துவம் எத்தகையது என்பதற்கு ஸ்ரீ ராமபிரானும் ஸ்ரீ லக்ஷ்மணனும் கைக் கண்ட பலமான திவ்ய உதாரணங்கள். பஞ்சபாண்டவர்கள் மற்றொரு தொகுதி உதாரணம். ஒரு சமயம் தேவர்களை இம்சித்து வந்த ராவணன் என்னும் கொடிய கொடுங்கோல் அரசன் ஸ்ரீ லட்சுமணப் பெருமானின் பேரில் "சக்தி" என்ற சிறந்த சூலாயுதத்தைப் பிரயோகம் செய்தான். அதனால் ஸ்ரீ லட்சுமணர் மரணத்திற்கேதுவான மூர்ச்சை யடைந்தனர். அப்போது மனோபலம் குன்றுத ராகவனும் வாய்விட்டு அலறிப் புலம்பினர். சுக்கிரீவன், ஜாம்பவான், விபீஷணன், அனுமான் முதலான பல மித்திரர்கள் தேற்றவும் தேறுனகி ஸ்ரீ ராகவன் சோகமுற்று என்னுரைத்தனர்? கேளுங்கள்: 'நான் வைதேகியை இழக்கினும் மற்றொருவளை மணக்கலாம். நும்போன்ற மித்திரரை இழக்கின் வேறு மித்திர ரத்தினங்களை எய்தலாம். ஆனால் நான் எனது இந்தத் தம்பியை இழந்து விட்டால் இனி மறுபடியும் என்னுடன் இவன் பிறப்பது எப்போது?' என்றார். இத்தகைய சகோதர உணர்ச்சியன்றோ உத்தமம். (ராவணன் இறந்தபிறகு ஸ்ரீராம பரம தாஸனான விபீஷ்ணன் 'அண்ணா! அஷ்டதிக்கு விஜயம் செய்த நீ ஒரு அற்ப மனிதன் கையால் மாண்டனையே' என்று தன்னையும் மறந்து ஸ்ரீ ராமன் மகிமையையும் மறந்து கதறி அழுதான். ஸ்ரீ மகாபாரதத்தில் ஸ்ரீ கண்ணபிரான் தான் துரியோதனனிடத்திற்குத் தூது சென்றால் என்ன விதமான ஏற்பாடு செய்துகொண்டு வரவேண்டும் என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்டதற்கு தர்ம சுவரூபியான யுதிஷ்டிரர் (தர்மராஜா) "தீனதயாளுவே! விஷமுண்டவர்களைப் போல் கலங்கியிருக்கும் அடியேனுக்குத் தேவரீர் அருளென்னும் அருமருந்தைப் பிரசாதித்து ஒரு குளத்தில் சேதம்பாலும் தாமரையும் பூத்தல் போல, நாங்கள் நூற்றைந்துபேரும் குருநாட்டில் ஒன்றுசேர்ந்து வாழுமாறு கிருபை செய்து அருள்க!" என்று பிரார்த்தித்தனர். ஸ்ரீ புத்தபகவான் தனது அந்திம காலத்தில் சீடர்களை அழைத்து "ஏ ஆனந்தா! நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் **உங்கள் தீபங்களாய்** இருங்கள். நீங்கள் பிரிந்துபோய் விடாதீர்கள். உங்கள் பரஸ்பர நேசமான சகோதரத்துவமே உங்களைக் காக்கும். அயலாரை நம்பி அவர்களைச் சார்பாகக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு நீங்களே சம்ரக்ஷகர்களாய் இருங்கள்" என்றார். கிறிஸ்துவும் மகம்மதுவும் இதையே போதித்து தங்கள் மதங்களை ஸ்தாபித்தனர். ஆனால் மதக் கொள்கைகளால் இவைகள் வேற்றுமை காட்டுபவைகள் என்றெண்ணி உள்ளார்ந்த ஆழ்ந்த உண்மையை மறந்துவிடக் கூடாது.

உலகத்தில் முக்கியமாய் பாரதர்களுக்குள் மதமே முக்கியப் பிரதானமானது. இத்தகைய மதத்தில் சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் முதலிய ஜன சமூக தத்துவங்களை நுழைத்து உலகினர் நன்மைக் காகவே ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. **மகா தத்வஸார** ஆனந்த மயமான உபநிஷத்துக்களில் எல்லாருடைய மனத்திலும் ஒரே பரமாத்மா விளங்குகிறான் என்று கூறியிருப்பதன் பொருளென்ன? கடவுளை 'வேண்டுதல் வேண்டாமை இலாதான்' என்றதன் பொருள் என்ன? கடவுளுக்கு ஒருவர் பேரிலும் விருப்பாவது வெறுப்பாவது கிடையாது, ஜீவகோடிகளெல்லாம் தனது சொந்த மக்கள். ஆகையால் எல்லாரிடத்திலும் சமமான கருணைகூர்கிறார். ஆனதினால் கடவுள் மக்களான அனைவரும் சகோதரர்களே என்று நமது பாரத நாட்டின் (எழுதப்படாத) தேவஞான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாகரமாகிய வேத நூல்கள் கூறுகின்றன. வேதங்கள் மீறி நடக்கக் கூடாத திவ்விய சாசனங்கள். அத்தகைய சாசனங்களில் கூறப்பட்டிருப்பதும் சகோதரத்துவமே.

நாட்டில் பிறந்த மனிதர்களுக்காகப் படாதன பட்டு துன்பம் நுகர ஸ்ரீ பகவான் ஆதியின் ஜோதியை அங்கு வைத்து இங்கு வந்து கமலக்கண்ணனுய் திருவவதரித் தருளி பார்த்தனின் பாமர சோகத்தைப் போக்க குரு க்ஷேத்திர ரணரங்கத்தில் உலகுய்யுமாறு உபதேசித்த கீதையில்,

"ஸ்வதர்மே நி தனம் ச்ரேய:
பரதர்மோ பயாவ க:"

(ஒவ்வொருவனும் தன்தன் தர்மத்தைச் செய்வதே நன்மை. அயலான் தர்மத்தைக் கொள்வது அபாயகர மானது) என்று அருளிச் செய்திருக்கிறார். ஏன் இதை அருளினர்? ஜன சமூகத்தின் சுக ஸ்தாபன ஏதுவான சகோதரத்துவத்தை நிலைநாட்டிக் காப்பதற்கு.

நாம் மேலே கூறிய உதாரணங்களில் கூறியுள்ள சந்தர்ப்பங்களைப் போன்ற சகோதரத்துவ உணர்ச்சி உண்டாய்விட்டால் நமது பாரத நாடு எத்தனை மேன்மை யாய் விளங்கும் என்பது எல்லோரும் அறிந்ததே.

கடவுளின் நாட்டிற்கிந்த புனித கட்டளையான சுதந்திரக் கிளர்ச்சியில் எண்ணிறந்த இம்சைகள், கஷ்டங்கள், துக்கங்கள், அபாயங்கள் முதலான சமுத் திரங்கள், பருவதங்கள் போன்ற தடைகளை யெல்லாம் தெய்வ சங்கல்பானுக்கிரக விசேஷத்தால் அப்புறப் படுத்தி மேன்மேலும் திட சித்தத்துடன், விடா முயற்சி யுடன், அளவிறந்த ஊக்கத்துடன், பரிபூரண உற்சாகத் துடன் தேச சேவை யென்னும் திருத்தொண்டு பூண்டு ஸ்ரீ பாரத மாதாவுக்கு கைங்கர்யம் செய்துவரும் பாரத தேச பக்தர்கள் இந்தச் சகோதரத்துவத்தைத் தாங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுநல காரியங்களில் ஜாதி மத வேற்றுமையின்றிப் பாராட்டியும், மற்ற சகோதரர்களையும் அவ்வண்ணம் அநுஷ்டித்து வரும்படிக்கும் இன்சொல் கூறி வருகின்றனர். ஸ்ரீ சுதந்திரதேவி இவர்களுக்குத் திருவருள் தருவாளாக! ஸ்ரீ பாரத மணித்திரு நாடு சுதந்திரம் அடைவதாக!

★

சத்திய விரதம்

இதுவரையில் நாம் ஜனசமூகத்தின் நன்மைக்கு அத்தியாவசியமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மகா பரிசுத்தமான தெய்வீக தத்வத்ரயங்களை நன்கு எடுத்துக் காட்டினேம். மேலும் அவைகளில் ஒவ்வொன்றையும் ஓர் விளக்கம், பாரத உணர்ச்சி, ஓர் நல்வழி என்ற தலைப்புகளின்கீழ் விஸ்தாரமாய் விளக்கிக் காட்டியிருக்கிறேம். இனி ஒவ்வொரு தேசாபிமானியும், தனது தேசத்தின் நன்மைக்காக உள்ளத்தில் கள்ளமொன்று மின்றி, பஞ்சபூத சாட்சியாய் திரிகரண சுத்தியாய், ஐயம் திரிபு அற உணர்ந்து அனுஷ்டிக்க வேண்டியதோர் சத்திய விரதத்தை இன்று நாம் கூறுவோம்.

சத்தியம் கடவுள் ஸ்வரூபம். அதுவே நிலையான ஞானம். அதுவே முடிவில்லாத பேரின்பத்தைப் பயக்குவது. அதுவே உலகத்தை வெல்ல மகாசக்தியுள்ள திவ்வியமான ஆதாரம். ஆகையால் ஒருவன் தான்

[இந்தியா : 8-1-1910]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்ட விரதத்தை அதற்குள்ள நியமங்களுடன் உள்ளும் புறமும் ஒத்து சத்தியமாய் அநுஷ்டித்து வந்தால் அது அவனுக்குக் கட்டாயமாய் ஒப்புயர்வில்லாச் சுகம்பயக்கும் என்பது திண்ணம்.

'நமது பாரதர்கள் அநுஷ்டிக்கவேண்டிய அத்தகைய சத்திய விரதம் யாது? அதை அவர்கள் எப்படி அநுஷ்டிக்க வேண்டும்? அதை ஏன் அநுஷ்டிக்க வேண்டும்? அதனல் வரும் பயன் என்ன?' எனும் இத்தகைய பல கேள்விகளும் சாதாரணமாய் ஆராய்ந்து யோசிக்கும் ஒவ்வொருவருடைய மனத்திலும் உதிப்பது சகஜமே. இதைக் குறித்தே அடியில் நாம் விஸ்தரித்துக் கூறுவோம்.

இந்தப் பாரத நாடானது இப்போது மெத்த க்ஷீண நிலையிலிருக்கிறது. அன்னியனின் கொடிய நிரங்குச பிரபுத்துவத்தால் எண்ணிறந்த கஷ்டங்களை அநுபவித்து வருகிறது. ஜனங்கள் தேகபலமும் மனோபலமும் குன்றிப் போய் விட்டார்கள். நாட்டினருக்கு நாட்டில் ஒருவித சுதந்திரமும் கிடையாது. பாரத நாட்டின் முப்பதுகோடி ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் அவர்களின் பொது நன்மைக்குச் சற்றும் அனுகூலமில்லாமல், அவர்களுடைய குறைபாடுகளையும் கஷ்டங்களையும் கவனியாமல் மேன்மேலும் கொடுமைகளை அதிகப்படுத்திக் கொண்டே, பிடிக்குள் அடங்கக்கூடிய அன்னிய நாட்டினர்கள் தங்கள் இஷ்டப்படிக்கு நமது பாரத நாட்டில் தன்னரசு செலுத்தி வருகிறார்கள். இதனல் நமது நாடு மெத்தவும் தாழ்ந்த நிலைக்கு வந்து விட்டது. இன்னும் தாழ்வதற்கு இடமில்லை.

இப்படிப்பட்ட சமயத்தில் பாரத நாட்டிலோர் புதிய உணர்ச்சி தெய்வ சங்கல்பானுக்கிரக விசேஷத்தால் நாட்டின் நன்மைக்காகவே தோன்றி யிருக்கிறது. அந்தத் திவ்விய உணர்ச்சி இதுவரையில் இன்னுட்டிலில்லாம லிருந்து, இப்பொழுதுதான் திடீரென்று தோன்றிவிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில்லை. ஆனால் ஞாபகத்திற் கெட்டாத காலம் முதற் கொண்டு நமது முன்னோர்கள் எப்பொழுதும் தங்களுடைய க்ஷேமத்திற்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் தங்கள் மனத்தில் நன்கறிந்து வந்த திவ்விய உணர்ச்சியே யாம். அவர்கள் அதுதான் சரியான உணர்ச்சி யென்று கண்டறிந்து அதன்வழியே நடந்து வந்தனர். அவர்களுக்கு அவ்வுணர்ச்சி எண்ணிலாப் பெருமைகள், லாபங்கள், சுகங்கள் முதலானவற்றையும் அருளிக் காத்து வந்தது. அவ்வுணர்வெனும் பெரும் பதத்தைப் பாரதர்கள் இந்தத் தாழ்ந்த நிலைமையில் உண்டான கஷ்டங்களால் தெரிந்துகொண்டனர். தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் தங்கள் முன்னோர்களின் காலத்து மாண்பானது தங்களுடைய கண்முன்பாக பின்னல் ஜோதிமயமாகப் பிரகாசிப்பதைக் காண்கின்றனர். தங்களுடைய பின்னோர்களுடைய சிறப்பானது தேஜோமயமாய் தங்களுக்கு முன்னல் பரந்து ஒளி வீசுவதையும் காண்கின்றனர். இதை அவர்கள் எப்படிக் கண்டனர்? அந்தத் திவ்விய உணர்ச்சியால் தான் கண்டு கொண்டனர். அதைப் புதிய உணர்ச்சியென்று சொல் வதன் காரணம் என்னவென்றால், ஒரு ஆத்மாவானது மறு சரீரத்தில் புகுந்து குழந்தையாய் பிறக்கும்போது அது புதிய ஜன்மமெடுத்தது என்று சொல்வது போலத் தான். இந்த உணர்ச்சி அதி சமீப காலத்தில் மறுபடி பிறந்தபோதிலும் எண்ணிறந்த கஷ்டங்களினிடையிலுங் கூட, தெய்வபலத்தால் வெகு நன்றாய்த் தழைத்து ஓங்கி வளர்ந்து வருகிறது. அதைப் பல வெள்ளாடுகள் மேய்ந்து அழித்துவிட முயல்கின்றன. ஆனால் இந்தச் செடியின் காரமானது அந்த வெள்ளாடுகளின் வயிற்றில் எரிச்சல் உண்டாக்கி விடுகிறது. சில வெள்ளாடுகளை மூச்சுத் திணறி ஓடும்படி செய்கிறது. சில இறந்தும் விடுகின்றன. எல்லாம் தெய்வ சங்கல்பமே.

இத்தகைய திவ்விய உணர்ச்சியால் சரியான ஒவ்வொரு பாரதனும் கைக்கொள்ள வேண்டிய சத்திய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரதமென்ன வென்றால் ஸ்ரீ பாரத சுயராஜ்ய விரதமே. இதுதான் ஒவ்வொரு பாரதனுடைய முக்கிய தர்மம். இதுதான் ஒவ்வொரு பாரதனுடைய கட்டாய கடமை. நண்ணலரை விண்ணிலராயினும் நடுக்குற இடித்திடு மிடுக்குடைய ஒவ்வொருவனும் அநுஷ்டிக்க வேண்டிய முழுமுதல் விரதம். அவன் எந்த ஜாதியானுயினும் சரியே, எந்த மதத்தினனுயினும் சரியே, பாரதன் என்ற எவனும் இதைக் கட்டாயமாய் ஆசரிக்க வேண்டியதே.

ஒரு விரதத்தை அனுஷ்டிப்ப தென்றால் சாமான்ய மன்று. அதன் நியமங்களை ஒன்று தவறுமல் கைக் கொண்டு நடக்க வேண்டும். அதற்கென்று சங்கல்பம் செய்துகொண்டு விட்டால், அது முடியும் வரையில் வேறு எதையும் கவனிக்கக் கூடாது. திடமான மனோநிலைமை யுடன் எது வந்தபோதிலும் தைரியமாயிருந்து தான் கொண்ட விரதத்தின் சித்திபெறும் வரையில் அதை சம்பூரணமாய் அநுஷ்டிக்க வேண்டும். ஒருவனுடைய ஸ்துதியையாவது நிந்தையையாவது கவனிக்கக்கூடாது. ஸ்துதியைக் கவனித்தால் வீண் சந்தோஷமும் கர்வமும் உண்டாய்விடும். நிந்தையைக் கவனித்தால் கோபமும் சோகமும் உண்டாய்விடும். ஆனதினால்தான் கொண்ட காரியத்தையே கண்ணுய் கவனித்து அநுஷ்டிக்க வேண்டும். அப்படியே ஒவ்வொரு பாரதனும் தனது தாய்த் திருநாட்டின் மீட்சிக்காக இந்த ஸ்ரீ பாரத சுயராஜ்ய மகாவிரதத்தைக் கட்டாயமாய் அநுஷ்டிக்க வேண்டியது அத்தியாவசியமே.

இந்த சுயராஜ்ய விரதமென்னும் நித்யானந்த மயமான சத்திய விரதத்தை அநுஷ்டிப்பவர்கள் சிறைச் சாலைகளில் கனமான விலங்குகளின் ஓசைகளுக்கும், வேலைகளின் கொடுமைகளுக்கும் அவ்வதிகாரிகளின் அகந்தை பிடித்த செயல்களுக்கும் அவமதிப்புக்கும் பயந்து உளம் தடுமாறவே மாட்டார்கள். உற்றூர், பெற்றூர், உறவினர் முதலானவர்களின் இடையிலிருந்து திடீரென்று கண்காணுத ஊர்களுக்குக் கொண்டுபோய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறையிலடைத்துப் பல துயரங்களுக்கு உட்படுத்தி வரும் பலவிதத்திலும், அயோக்கியமான ஆள்தூக்கிச் சட்டங் களின் தேச நிர்வாகத்திற்குக் கொஞ்சமேனும் அஞ்சார். தங்களைக் கொலைபாதகர்கள், வஞ்சகர்கள், பல அநியாயம் செய்தவர்கள் இவர்களுடன் கூட தீபாந்திரத் திற்கு அனுப்பி அங்கு பல இடுக்கண்படுத்தி வரினும் தங்கள் மனோதிடத்தைக் குறைக்கமாட்டார்கள். தனது தாய்த் திருநாட்டின் தொண்டுபூண்டு தேச சேவை செய் வதில் ஒரு சமயம் மரணம் நேர்ந்திடினும், அதனை யவர்கள் சன்மானம் போலவே மனத்தில் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வார்கள். மலையின் உச்சியிலிருந்து உருட்டப்படல், இருப்புலக்கை கொண்டு புடைக்கப் படல், தீயிலிடப்படல், கற்பாறையில் கட்டப்பட்டு கடலில் அமிழ்த்தப் படல், மதயானைகளால் இடறப் படல், விஷ நாகங்களால் கடிக்கப் படல், பிப்பாயில் உருட்டப் படல் முதலான அகோர இம்சைகளுக்கு உட் படுத்தப்பட்ட பிறகு ஸ்ரீ பகவானைக் கண்ட பரம பக்த சிரோமணியான ஸ்ரீ பிரகலாதாழ்வானே ஸ்ரீ பாரத சுயராஜ்ய விரதானுஷ்டானங்களுக்கு முக்கியமான முன்னிலை. தனது அகண்ட சாம்ராஜ்ய சக்கரவர்த்தி பதவியையும் இழந்து, தனது அருமையான ஒரே புதல்வனும் இறந்து கிடக்க தனது மனைவியையும் அயலானுக்கு அடிமையாக்கிக் கொண்டு, பிணஞ் சுடும் சுடலை காத்து, பிறகு திரிமூர்த்திகளின் அருளால் தானிழந்த சாம்ராஜ்ய பதவியை மறுபடியும் பெற்ற சத்திய விரதனின் மகனை ஸ்ரீ அரிச்சந்திரனே அவர்கள் தங்கள் கஷ்டங்களின் இடையில் மனோதிட பக்தி விசுவாசத்தை உறுதி செய்துகொள்ள சிறந்த உதாரண மாம்.

"நஹி கல்யாண க்ருத்கச் சித்
துர்க்க திம் தாத கச்சதி"

நல்ல காரியத்தைச் செய்தவன் ஒருநாளும் கெட்ட கதியை அடைவதில்லை யென்று ஸ்ரீ பகவான் தமது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திவ்விய கீதையில் அருளிச்செய்திருப்பதை அவர்கள் மனத்தில் நிலைநிறுத்தியிருக்கிறார்கள். தாங்கள் கொண்டிருக்கும் ஸ்ரீ பாரத சுயராஜ்ய ஸ்தாபகமெனும் சத்திய விரதத்தில் தங்கள் தங்கள் உடற்கு வருமிடர்கள் ஒரு கோடியாயினும் பாரதர்கள் கடுகளவேனும் நடுக்கமுறார். பொறுமையுடன் தாங்கள் மேற்கொண்ட விரதத்தைப் பூர்த்தியாக அநுஷ்டிப்பதே அவர்களுடைய நோக்கம். கருணைநிதியான கடவுள் அவர்களுடைய முயற்சி ஜயமடையும்படி திருவருள் தந்தருளுவர் என்பதே அவர்களுடைய நம்பிக்கை.

இத்தகைய ஸ்ரீ பாரத சுயராஜ்ய ஸ்தாபக சத்திய விரதத்தைப் பாரதர்கள் அனைவரும் முழு மனத்துடன் கைக்கொள்ள வேண்டும். எத்தனை கஷ்டங்கள் வந்த போதிலும், எத்தனை வாதைகளுக் குட்படுத்தப்பட்ட போதிலும், கொண்ட விரதத்தைக் கைநழுவ விடாமல் பூர்த்தியாய் அதன் பலனித்தியை யடையும் வரையில், ஸ்திரமான மன உறுதியுடன் கடைப்பிடித்து அநுஷ்டிப்பவன்தான் "தேஜஸ்வி" யான "மகா தபஸ்வீ" என்று பாரத நாட்டில் கருதப்பட்டவன். அத்தகைய மகான்களின் பரிசுத்தமான இரத்தம் நமது பாரதர்களின் நாடிகளில் இன்றும் ஓடுகிறது. இதை உணராதவர்களில்லை. அப்படிப்பட்ட திவ்விய அம்சமாய் விளங்கும் பாரதர்களனைவர்களும் இந்த நித்திய முக்தியைப் பயக்கும் பக்தி பூர்வீகமான சத்திய விரதத்தைக் கைக்கொண்டு கருணைக்கடலான கடவுளை நம்பி ஸ்ரீ பாரத மாதாவுக்குத் தொண்டு பூண்டு "சுயராஜ்ய" பிராப்தி வரையில் தேச சேவை செய்து வருமாறு ஸ்ரீ சுதந்திர லக்ஷ்மி இவர்களுக்குத் திருவருள் புரிவாளாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வதேசீயம்

(1)

ஸ்வதேசீயம் என்றால் என்ன? சொந்த நாடு சம்பந்தமானது என்பது பொருள். அதாவது என்ன வென்றால், ஒவ்வொரு நாட்டினர்களும் தங்கள் தங்கள் நாட்டின் சுதந்திர சம்ரக்ஷணைக்காகவும் அபிவிருத்திக் காகவும் செய்ய வேண்டிய காரியங்களைக் கட்டாயமாய்ச் செய்து முடிக்க வேண்டியது அந்தந்த நாட்டினரின் கடமை என்ற ஒரு பெரிய உணர்ச்சியேயாம். இந்த ஸ்வதேசீயம் நான்கு பிரிவுகளுள்ளது. முதலாவது கைத்தொழில் விருத்தி முதலான பொருளாதார விசேஷங்கள். இரண்டாவது அந்தந்த நாட்டினர் தங்கள் தங்கள் நாட்டின் அரசாட்சியை ஜனங்களுடைய நன்மைக்கும், விருப்புக்கும் ஏற்றவாறு நடத்தல்; மூன்றாவது தங்கள் நாட்டை அன்னியர்கள் வந்து மேல் விழுந்து தாக்காமலிருக்கும்படி பாதுகாத்தல்; நான்காவது சொந்த தேசத்துக் கல்வியையும் நல் லொழுக்கங்களையும் முற்றும் கைக்கொள்ளல் எனும் இந் நான்கு பிரிவுகளாம். இந்நான்கு பிரிவுகளடங்கிய ஸ்வதேசீயத்தைக் கையாட வேண்டியதே பாரதர்களின் முக்கியமான கடமை. இவற்றைக் கையாடி வந்தால் தான் பாரதநாடு க்ஷேமமடையும். இதற்குத் தடை யில்லை. இதுதான் பாரத ஸ்வராஜ்ய சத்திய விரதத்தில் பாரதர்கள் அநுஷ்டிக்க வேண்டிய முக்கியமான முழு முதல் நியமமாம்.

முதலாவது நமது நாட்டின் கைத்தொழில்களை விருத்தி செய்து பொருளாதாரத்தில் நமது நாட்டைச்

[இந்தியா : 6-1-1910]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செழிக்கச் செய்ய வேண்டும். இம்மாதியான கைத் தொழில் விருத்திக்கு நாட்டினர்களின் உதவி பலவிதத் திலும் அவசியமானது. பணம் வைத்திருப்பவர்கள் தங்கள் பணத்தைக் கொண்டு ஒரு நல்ல தொழிற்சாலை ஏற்படுத்தி அதில் சாமான்கள் செய்து வர வேண்டும். இந்தச் சாமான்களையே நாட்டினர்கள் வாங்க வேண்டும். முதலில் இந்தச் சாமான் நல்ல பகட்டாய், கை தேர்ந்த வேலைப்பாடுடன் நேர்த்தியாய் செய்து முடிக்க முடியாது. விலையும் கொஞ்சம் அதிகமாய்த் தானிருக்கும். ஏனென்றால் இத்தகைய கைத்தொழில்களின் ஆரம்பம் நமது தலைமுறையிலிருப்பவர்களுக்குப் புதியது. மேலும் பழைய நாளின் வேலைகளில் தேர்ந்த அநேக வேலைக் காரர்கள் காலம் சென்று விட்டனர். பலர் ஆதரிப்பா ரின்றித் தங்கள் தொழில்களை விட்டு வேறு நவீன தொழில்களில் புகுந்தனர். பெரிய தொழிற்சாலையில் முதல் வைப்பவர்கள் ஏராளமாகச் சாமான் செய்து நாடெங்கும் விற்றாலொழிய லாபம் கிடைக்காது. இதனால் முதலாளிகள் ஆரம்ப வருஷங்களில் ஏற்படும் சொற்ப நஷ்டங்களைக் கவனிக்கக் கூடாது.

மேலும் விற்பனையில் அதிக லாபத்தை எதிர்பார்க்கக் கூடாது. நாட்டினர்கள் எல்லோரும் இந்தச் சாமான் களையே வாங்க வேண்டியது கடமை. இல்லாவிட்டால் நமது நாட்டின் சாமான்களை வாங்குகிறவர்கள் யார்? வெளிநாடுகளுக் கனுப்புவதென்றால் ஏராளமான பணச் செலவு. ஆரம்பத்தில் சாமான்கள் பகட்டு, விலை சரசம் முதலான வைகள் இல்லாமலிருக்கலாம். அதற்காக நாம் நம் நாட்டுச்சாமான்களை வாங்காமல் விட்டுவிடக்கூடாது. ஏனென்றால் ஒரு குழந்தை பிறக்கும்போதே அது பெரிய ஆளாகி நன்றாய்ப் பேசிப் பழக்கப்பட்டதுபோல் காரியங் களைச் செய்து முடித்து விட முடியாது. அதை நாம் வெகு கவனமாய் போற்றி வளர்த்து, அதற்கு வேண்டிய ஆகாரங்கள் கொடுத்து ஸ்நானம் முதலான பல சௌகரி யங்கள் செய்தால்தான் குழந்தை புஷ்டியாய் வளர்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆளாகி, காரியங்களை நிர்வகித்து தனது பெற்றோர்களைத் தள்ளாத வயதில் காப்பாற்றத் திறனுடையதாய் இருக்கும். இதனிடையில் அந்தக் குழந்தைக்குப் பல நோய்கள், மாந்தங்கள் முதலான கண்டங்கள் உண்டாகும். அவற்றிற்கெல்லாம் தக்கபடி வைத்தியங்கள் செய்து வியாதிகளைப் போக்கடிக்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை உயிருக்கே மோசம் வருகிறது. இதெல்லாம்தான் பெற்றோருடைய கடமை அந்தக் குழந்தை பிறந்தவுடனே பேசவில்லையே என்றுவது, வியாதி முதலியவைகளால் பீடிக்கப்படுகிற தென்றுவது அந்தக் குழந்தையை ஒரு பாழும் கிணற்றில் தள்ளி, அந்தக் கிணற்றின் சுற்றுக் கைப்பிடிச் சுவரை இடித்து அதை மூடி விடலாமா? எவ்வளவு கல் நெஞ்சுடையவர்களாய் இருந்த போதிலும் யாருக்காவது இப்படிச் செய்ய மனம் வரும்மா? அப்படி யவர்கள் செய்யும் காரியம் சரிதான் என்று உலகத்தில் யார்தான் சொல்ல நா வெழும்? அதுபோலவே நமது பாரத நாட்டின் ஸ்வதேசீய பெரு முயற்சியில் கைத்தொழில் பொருளாதார விஷயத்தில் நாம் அசட்டை செய்யலாமா? நமது சாமான்கள் நன்றாய் பகட்டாய் இல்லையென்று சொல்லி அதைத் தள்ளி விடலாமா? குழந்தை நமது மடியில் மல ஜலங்களுக்கு போய் விட்டாலுங் கூட அதையெல்லாம் திருப்தியாகக் கொள்ளவில்லையா? நூறு தான் நாம் அயலார்களின் பிள்ளையைப் போற்றி அதை வளர்த்தாலும் நமது பிள்ளை போலாமா? நமது தாயார் வயிற்றுக்கில்லாமல் குடிக்கத் தண்ணீருக்குக் கூட வழியில்லாமல் தவிக்கையில் வைப்பாட்டியின் தாய்க்குப் பாலும் சோறும் போடுவது பாவமென்பது ஏ! பாரதர்களே உங்களுக்குத் தெரியாதா? நமது மாதாவின் செல்வமான ஜீவ ரத்தத்தைப் பிரிடிஷான் உறிஞ்சிக் கொண்டு போய் விடுகிறானே. மாதாவானவள் பலஹீனயாகி தரித்திர நிலைமையடைந்து பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு சாகுந்தருவாயில் இருப்பவள்போலக் காணப்படுகிறாளே! இவளைக் காப்பாற்ற வேண்டியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உன் முழு முதற் கடமை என்பது உன் ஆங்கில மாய்மாலம் நிறைந்த மூளையில் ஏறவில்லையா? கோடிக் கணக்காக மாதாவின் மக்கள் மகம்மாரி, பெருவாரி, பஞ்சம் முதலான தரித்திர கஷ்டங்களை யநுபவித்து மடிகிறார்களே! ஏ! பாரதா உனக்குக் கண்ணில்லையா? அறிவில்லையா? உன் மயக்கம் தீரவில்லையா? மாதாவுக்கு ஊழியம் செய்ய முன்னுக்கு வரும் தேச பக்தர்களையும் உதவி செய்ய வரும் பொருளாதார தொழில் முயற்சிகளையும் ஒருங்கே அன்னியன் நசுக்கி வருவது உன் கண்ணில் படவில்லையா? அவன் செய்யும் தீமைகள் உன் கட்டையில் உறைக்கவில்லையா? இத்தனை கஷ்டங்களிடையில் மனந்தளராமல் திடமான பக்தியுடன் தேசத் திருத்தொண்டர் பாடுபட்டு வருகின்ற படியால் மாதாவின் துயர் நீங்கி அவள் முகத்தில் ஒளி வீசுவது உனக்குத் தெரியவில்லையா?

வானத்தை முட்டி நிற்கும் மலை சிற்றுளியால் தகர்க்கப் படுகிறது. சிறிய நெருப்பும் ஒரு பெரிய வைக்கோல் போரைச் சுட்டெரிக்கிறது. ஆகாயமளாவிய ரதத்தை விரலத்தனை அச்சாணி நடத்துகிறது. சகல ஸந்மார்க்க சம்ரக்ஷணத்திற்காக ஸ்வதேசீய முறை கைக்கொள்பவர்கள் ஒரு சிறு பகுதியாய் இருந்த போதிலும் இம் முயற்சியால்தான் நாட்டிற்கு நன்மை பெருகவேணும். இம்முயற்சி ஏற்கனவே நாடெங்கும் பரவி விருத்தியாய்க் கொண்டே வருகிறது என்பது சொல்லாமலே விளங்குகின்றது. இந்த ஸ்வதேசீயத்தின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பகுதிகளைப் பற்றி இன்னொரு முறை விஸ்தரித்து எழுதுவோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வதேசீயம்

(2)

நமது பாரத நாட்டின் மீட்சிக்காகக் கடவுளால் நமக்குத் தந்தருளப்பட்டிருக்கும் இந்த ஸ்வதேசீயப் பெரு முயற்சியில் நான்கு பிரிவுகளுள் முதலாவதான பொருளாதாரத் தொழில் விருத்தி விஷயமாய் எழுதி யிருந்தோம். இப்போது இரண்டாவதான அரசுரிமையை ஜனங்கத்தின் விருப்பப்படி நடத்துவதற்குக் காரணமா யுள்ளவைகளைச் சொல்லுவோம்.

இப்பொழுது பாரதர்களுக்குப் பலம் குன்றியிருக் கிறது. இதற்குக் காரணம் என்ன? சரியான உணவு இல்லாததே. ஏன் உணவில்லை? உணவுப் பொருள்கள் அன்னிய நாட்டிற்குக் கப்பல் கப்பலாய் ஏற்றிவிடப்படு கின்றன. நாட்டில் அதைத் தடுப்பாரில்லை. பிரிடிஷ் அரசாங்கம் அதற்கு உடந்தை. எத்தனைதான் இருந் தாலும், நமது பாரத நாடானது நமது அரசர்களால் ஆளப்பட்டால் இம்மாதிரி ஒருபொழுதும் நடைபெறுது என்பது திண்ணம். சமீபத்தில் ஆப்கானிஸ்தானத்தி லிருந்து கோதுமையை ஐரோப்பாவுக்குக் கொண்டு போவதற்காகக் கப்பல் வர்த்தகர்களுக்கு அதை விற்கக் கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு அமீர் செய்திருக் கிறார். அத்தகைய உத்தரவு செய்தாலல்லவோ நாட்டின் ஜனங்களுக்கு உண்மையாகவே நன்மை உண்டாகும்.

மேலும் நமது தேசத்தில் ஜனங்கள் தங்களுடைய பலவீனத்தினாலும் அன்னியர்களின் ஒழுங்குகளைக் கைக் கொள்வதாலும் மெத்தவும் அதிக பலவீனர்களாய் ஆய்விடுகின்றார்கள். இத்தமாதிரி நமது வாலிபர்கள்

[இந்தியா : 5-2-1910]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலவீனர்களாய் போய்த் தவிக்காமலிருக்க ஸ்வதேச முயற்சிக்கப்புறம் நாட்டில் பல **அக்கராக்கள்** ஏற்பட்டன. பல சமிதிகள் தோன்றின. இரண்டு வருஷ காலத்திற்குள்ளேயே இவைகளில் சேர்ந்திருந்த பிள்ளைகள் பலிஷ்டர்களாய் விட்டனர். இவர்கள் தாங்களாகவே வழிநடைப் பாதைகள் போட்டிருக்கின்றனர். குளங்கள் தோண்டி படிக்கட்டுகள் கட்டியிருக்கின்றனர். அர்த்தோர் தயம், மகர சங்கிராந்தி முதலான விசேஷ காலங்களில் கங்கா சாகரம் முதலான புண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரிகர்களுடன் கூடப் போய் அநேகவிதமான உதவி புரிந்தனர். இம்மாதிரி பலிஷ்டர்களான வாலிபர்களின் ஸமிதி வெகு நல்ல காரியங்கள் செய்து வந்தது. கடைசியாய் பிரிடிஷ் கவர்மென்டார் அவ்விஷயத்தைப் பற்றி விமர்சனம் அந்த சமிதிகளைக்கலைத்துவிட்டார்கள். தேகப் பயிற்சியை இனி சிறுவர்கள் அவரவர்கள் வீட்டிற்குள் செய்துகொள்வார்கள். நமது ஸ்வதேசிய முயற்சியின் ரக்ஷணைக்காகத் தேச சேவை செய்ய வட நாட்டாரைப் போலத் தென்னாட்டிலும் பலர் வேண்டும். ஆங்காங்கு தேகப் பயிற்சி சாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதில் நல்ல கஸரத் வேலைகள் நன்றாக செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். தேக பலம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் பாதுகாப்புக்காகத்தரைப்படைகள்,கப்பற்படைகள் முதலான வைகளைப் போர்க் கருவிகளுடன் சித்தமாய் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். நமக்கோ போர் பயிலும் சக்தியில்லை. அப்படி எவனுவது இருப்பவன் போலீஸில் சேர்ந்துவிடுகிறான். அப்படி சக்தியுள்ளவன் ஸ்வதேசியத்திற்காகப் பாடுபட்டு உழைத்துவந்தால் அரசாங்கத்தார் அவனைப் படுத்தாத பல பாடு படுத்துகிறார்கள். ஸ்வதேசீயம் உண்டான நாள்முதல் இந்தத் தொல்லைகளே. மேலும் பொருளாதாரத் தொழில் முயற்சிகளால் பணம் சம்பாதிக்க வேண்டியதுதான் ஸ்வதேசீயத்தில் முதல் நோக்கம். நமக்குப் பணம் இருந்தால்தான் பலமும் நிர்விசாரத் தன்மையும் உண்டாகும். பணமில்லாதோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிணமாம் பான்மை சேர்வர் என்பது மூதுரை. அப்படி நாம் சம்பாதித்த பணத்தைக் காப்பாற்ற நமக்குச் சக்தி இருக்கவேணும். அதற்குப் பலமும் திட நெஞ்சும் இருக்க வேண்டும். அந்தந்தத் தொழில் முயற்சிகளால் வரும் லாபத்தைக் கொண்டு ஏழை ஜனங்களைக் காப்பாற்ற லாம். மேலும் சக்தியில்லாதவனுக்கு ஒருவரும் உதவி செய்ய மாட்டார்கள். அடியோடு உட்கார்ந்து கொண் டால் யார் கை கொடுப்பது? ஆகையால் முதலில் பலத் தைச் சம்பாதிக்க வேண்டும்; பிறகு சேனை முதலிய வற்றில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக் கின்றன. நம்மவர்களைப் பிரிடிஷ் அரசாங்கத்தார் காலாட் படை முதலான தாழ்ந்த வகுப்புகளிலே போட்டு கொஞ்சம் சம்பளம் கொடுத்து அதிக வேலை வாங்குகிறார்கள். கப்பற் படையில் நம்மவர்களுக்குப் பிர வேசமே கிடையாது. இன்றைய தினம் பிரிட்டிஷார்கள் நமது நாட்டை விட்டு வெளியே போய்விட்டால் நமது பாரத நாடு மெத்த சீர்கேடான நிலைமைகளுக்கு வந்து விடுமென்று பலர் கருதுகின்றனர். இது உண்மையா அல்லது தப்பா என்பதைப் பரீக்ஷித்துப் பார்க்க ஒரு வருஷத்திற்குப் பிரிடிஷார் நாட்டைப் பாரதர்கள் விதிப்படி நடக்கட்டுமென்று விட்டுவிட்டு எல்லா ஆங்கி லேயர்களும் வெளியேறிப் போகட்டும். அப்போது உண்மை தெரியும். பாரத நாட்டில் இந்தச் சுதேசிய இயக்கம் உண்டான பிறகு ஜனங்களுக்கு ஒரு மனே திடமும், சரீர பலமும், ஸ்வஜனபிமானமும், தேச பக்தியும் உண்டாகி யிருக்கிறது என்பதை ஒருவராலும் தடுத்துச் சொல்ல முடியாது. ஆனபடியால் நமது நாட்டின் அரசுரிமை நடத்தும் அறிவும், நாட்டைக் காக்கும் திறனும் நமக்குச் சமயத்தில் உண்டாய் விடும்.

நாட்டைப் பொதுஜன விருப்பப்படி ஆள்வது உத்தம மான உலகநீதி. இதுதான் முற்காலத்தில் நமது பாரத நாட்டில் நடைபெற்று வந்தது. இப்போதும் அதன் சின்னங்கள் அடியோடு அழிந்து விடாமல் அநேக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடங்களில் இருக்கின்றன. அதாவது கிராமப் பஞ் சாயத்து. இந்தக் கிராமப் பஞ்சாயத்தார் சபைக்கு மேல் இப்போது பிரிட்டிஷ் ராஜ்யத்தில்கூட அப்பீலே கிடை யாது. பட்டண பரிபாலனமும் அப்படியே நடைபெற்று வந்தது. ஒரு அரசன் ஏதாவது செய்யவேண்டி யிருந்தால் ஜனப் பிரதிநிதியான தனது சபையார்களுடன் அந்த ரங்கமாக ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாய் ஆலோ சித்து, நமது விமர்சித்து, ஒரு விதமாய் முடித்து பிறகு அதே பிரகாரம் செய்வான். எண்ணிறந்த பணத்தைக் கோர்ட்டில் கொட்டி இறைத்து வீண் வழக்கிடாமல் தனது ஜாதியார்களிடம் மத்தியஸ்தம் செய்து கொள் ளலே நலம். இந்தப் பஞ்சாயத்துதாரர்கள் அரசனுக்கு யோசனை சொல்வதுடன் வழக்குகளைத் தீர்த்து, ஜனங் களுக்கு வேண்டிய சுகாதாரம் முதலியவைகளைச் செய்து வந்தனர். இத்தகைய பஞ்சாயத்து சபை யென்னும் சுதேச நியாய ஸ்தாபனங்கள் இப்போது பாரத நாடெங்கும் ஏற்பட வேண்டும். தங்கள் நாட்டு வியவ காரங்களை ஜனங்கள் இஷ்டப்படி நடத்தும் ஜனங்க ஆட்சிக்கு இத்தகைய பஞ்சாயத்து சபையே அவசியம். மற்றிரண்டு பிரிவுகளைப்பற்றி அடுத்த தடவை எழுது வோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Signature Date
Acces on 19/11/99
Tag e
Filing
E.A.R
Any other
Checked



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்த நூல்

மகாகவி பாரதியாரின் புதுமைக் கொள்கை களையும் புரட்சிக் கொள்கைகளையும் இனிது எடுத் துரைக்கும் புதிய நூல் இது.

'இந்தியா' பத்திரிகையில் தொடர்ந்து எழுதிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் - என்ற கட்டுரைகளே இவை.

நாடும் மக்களும் ஏற்கும் வகையில், உலக சரித்திரக் கண்ணோட்டத்துடன் தமது நெஞ்சுக்கு நேர்மை என்று தோன்றிய கருத்துக்களை எடுத்துச் சொன்ன மகாகவியின் சிந்தனைக் களஞ்சியமே நூல் வடிவம் பெறுகின்றது.

'பாரதி யுகத்தைப் படைக்கும் இலக்கியப் பணியில் இப்படிப்பட்ட நூல்கள் முதன்மை பெறும் என்பதில் சந்தேகமில்லை' என்று திரு. நேபம் நா. பா. அவர்கள் தமது அணிந்துரையில் கூறுகிறார்.

புதிய அறம் பாடிய கவிஞனின் இந்த நூல் ஒவ்வொரு தமிழனின் கரத்திலும் திகழ வேண்டும்.

புதிய கருத்துக்கள் - புதிய சிந்தனைகள் இவற்றைக் கொண்ட நூல் "மும்மணிகள்."

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar
Wrapper Printed by The Progressive Printers, Madras-600 001.